வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959
Reg. No. : P. 1632
விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu — ඊළනාඩු




Email : eelanaduweekly@gmail.com மலர் : 06 24.12.2024 செவ்வாய்க்கிழமை இதழ் : 358 பக்கங்கள் : 12

# வடக்கில் சில அதிகாரிகளை வைத்து மக்களுக்கு சேவையாற்றுவது சவால்!

## மாகாண ஆளுநர் வேதநாயகன் விசனம்

யாழ்ப்பாணம், டிசெம்பர் 24

**“வடக்கு மாகாணத்திலுள்ள ஒரு சில அதிகாரிகளை வைத்துக்கொண்டு எங்கள் மாகாணத்து மக்களுக்கு சேவை செய்வதென்பதும் முன்னேற்றுவதென்பதும் மிகச்சவாலான விடயமாகவே இருக்கின்றது.”**

**- இவ்வாறு தெரிவித்துள்ளார் வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன்.**



வடக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களமும், கரைச்சிப் பிரதேச செயலகமும், கலாசார பேரவையும் இணைந்து நடத்திய கலாசாரப் பெருவிழாவும், கரை எழில் நூல் வெளியீடும் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை காலை கரைச்சிப் பிரதேச செயலக மண்டபத்தில் பிரதேச செயலர் த.முகுந்தன் தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றிய வடக்கு மாகாண ஆளுநர் மேலும் தெரிவித்ததாவது-

கிளிநொச்சி மாவட்டச் செயலராக நான் பணியாற்றியபோது இறுதிக்கட்டப்போர் ஆரம்பமானது. இந்த மாவட்ட

11

# விமானப்படையின் கேப்பாபிலவு முகாமில் ரோஹிங்யா அகதிகள்!

முல்லைத்தீவு, டிசெ. 24

திருகோணமலை ஜமாலியா முஸ்லிம் மகா வித்தியாலயத்தில் தங்கவைக்கப்பட்டிருந்த மியன்மார் - ரோஹிங்யா அகதிகள் முல்லைத்தீவு கேப்பாப்பிலவு விமானப்படை முகாமில் தங்க வைப்பதற்காக நேற்று அழைத்து வரப்பட்டனர்.

பொலிஸாருக்கு சொந்தமான இரு பஸ்களில் குறித்த அகதிகள் 103 பேரும் பொலிஸ் பாதுகாப்புடன் நேற்றுக் காலை 7.30 மணியளவில் அழைத்து வரப்பட்டனர்.

11

# மோட்டார் சைக்கிளில் பயணித்த குடும்பஸ்தர் மயங்கிவிழுந்து சாவு!

- பு.கஜிந்தன் -

யாழ்ப்பாணம், டிசெ. 24

மோட்டார் சைக்கிளில் வீதியில் பயணித்துக் கொண்டிருந்த நபர் ஒருவர் திடீரென மயங்கி விழுந்து உயிரிழந்தார். அச்செழு, நீர்வேலிப் பகுதியைச் சேர்ந்த தேவதாசன் உதயசேனா (வயது 64) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

நீர்வேலியில் அமைந்துள்ள வாழைக்குலைச் சங்கத்துக்கு நேற்று வாழைக்குலையை கொடுப்பதற்காக மோட்டார் சைக்கிளில் அவர் சென்று

11

# யாழ்.மாவட்டத்துக்கு வெளியே பணியாற்றாத ஆசிரியர்களுக்கு வெகுவிரைவில் இடமாற்றம்!


## வடக்கு ஆளுநர் அதிகாரிகளுக்கு பணிப்பு

யாழ்ப்பாணம், டிசெ. 24

யாழ். மாவட்டத்திலேயே அதிகளவான ஆசிரியர்கள் இருப்பதால், வெளிமாவட்டங்களில் அவர்கள் மீண்டும் வடக்கு மாகாணத்தின் ஏனைய மாவட்டங்களிலும் மீண்டும் பணிபுரிய வேண்டிய நிலைமை ஏற்படலாம் எனச் சுட்டிக்காட்டிய வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன், ஒருபோதும் வெளிமாவட்டங்களில் பணியாற்றாதவர்களை விரைவில் வெளிமாவட்டங்களுக்கு இடமாற்றவேண்டும் என்று அதிகாரிகளுக்கு அறிவுறுத்தியுள்ளாதாகவும்

11





2025 ஆம் ஆண்டை வரவேற்கும் முகமாக டான் தொலைக்காட்சி குழுமம் யாழ். மணிக்கூட்டு கோபுரத்தை மின்விளக்குகளால் அலங்கரித்துள்ளது. இவ்வாறு அலங்கரிக்கப்பட்ட மணிக்கூட்டு கோபுரத்தை வடக்கு மாகாண ஆளுநர் நா. வேதநாயகன், யாழ். மாவட்ட அரச அதிபர் ம.பிரதீபன் ஆகியோர் நேற்று திறந்து வைத்தனர். டான் தொலைக் காட்சி குழுமம் புதிய ஆண்டை வரவேற்கும் விதமாக இந்த நிகழ்வை தொடர்ந்து முன்னெடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

(படம் : லி.ஜெகன்)

# எலிக் காய்ச்சல் தொற்றை அடுத்து யாழில் தீவிரமாக பரவுகிறது டெங்கு!

யாழ்ப்பாணம், டிசெ. 24

யாழ். மாவட்டத்தில் டிசம்பர் மாதத்தில் மாத்திரம் இதுவரை 91 பேர் டெங்குத் தொற்றால் பாதிக்கப்பட்டுள்ளதாக யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

யாழ்ப்பாணத்தில் அண்மையில் நிலவிய சீரற்ற காலநிலையைத் தொடர்ந்து, டெங்குத் தொற்று மிகையாக அதிகரித்து வருகின்றது.

இதன்படி, நவம்பர் மாதத்தில் 134 பேரும், டிசெம்பர்

11

# பயங்கரவாதத்துக்கு நிதியிடலை ஒழிக்க பலம்மிக்க கட்டமைப்பொன்று அவசியம்!

## ஜனாதிபதி அநுர வலியுறுத்து

கொழும்பு, டிசெ. 24

பணம் தூயதாக்கலுக் கெதிரான மற்றும் பயங்கரவாதத்துக்கு நிதியிடலை ஒழிப்பதற்கு பலமான மற்றும் செயற்திறனுள்ள கட்டமைப்பொன்று அவசியம் என ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க சுட்டிக்காட்டியுள்ளார்.

பணம் தூயதாக்கலுக் கெதிரான மற்றும் பயங்கரவாதத்திற்கு நிதியிடலை ஒழிப்பதற்கான ஆசிய பசுபிக் குழுவின் மூலம்

11

# உள்ளூராட்சி தேர்தல் திருத்தத்தை விரைவாக நிறைவேற்றவேண்டும்!

## உள்ளூராட்சி மன்றங்கள் அமைச்சுக்கு தேர்தல் ஆணைக்குழு அறிவுறுத்தல்

கொழும்பு, டிசெ. 24

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் சட்டத்தை திருத்தம் செய்யாமல் உள்ளூராட்சி மன்ற சபைத் தேர்தல் வாக்கெடுப்பு தினத்தை தீர்மானிப்பதில் சட்ட சிக்கல் காணப்படுகிறது. ஆகவே சட்டத்திருத்த பணிகளை விரைவாக நிறைவு செய்யுமாறு தேர்தல்கள் ஆணைக்குழு

11

# மகிந்தவுக்கு ஏதும் நடந்தால் அரசாங்கமே முழு பொறுப்பு

## பொதுஜன பெரமுன கடும் விசனம்

கொழும்பு, டிசெ. 24

முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு உயிரச்சுறுத்தல் காணப்படுவதாக புலனாய்வுப் பிரிவு பலமுறை அறிக்கை சமர்ப்பித்துள்ள பின்னணியில் இராணுவப் பாதுகாப்பு முழுமையாக நீக்கப்பட்டுள்ளமை தவறானதொரு தீர்மானமாகும். மகிந்தவுக்கு ஏதேனும் பாதிப்பு ஏற்பட்டால் முழு பொறுப்பையும் அரசாங்கம் ஏற்கவேண்டும் என பொதுஜன பெரமுன வின் உறுப்பினர் மனோஜ் கமகே தெரிவித்தார்.

11



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேர்தல் காலத்தில் போலியான வாக்குறுதிகள் வழங்கிய அரசு!

## நளின் பண்டார குற்றச்சாட்டு

கொழும்பு, டிசெ. 24

தேசிய மக்கள் சக்தியின் தேர்தல் கால வாக்குறுதிகள் போலியானவை என மக்கள் உணர்ந்துள்ளதாக ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் நளின் பண்டார தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

ஆட்சியைக் கைப்பற்றுவதற்காக தேசிய மக்கள் சக்தியினர் பல்வேறு வாக்குறுதிகளை அளித்தனர். எனினும் அவை நிறைவேற்றப்படவில்லை.

அதிகாரத்துக்கு வந்தவுடன் மின்சாரக் கட்டணத்தை குறைப்பதாகவும் எரிபொருள் விலையை குறைப்பதாகவும் தேர்தல் மேடைகளில் கூறப்பட்டது. எனினும் அந்த வாக்குறுதிகளுக்கு என்னவாயிற்று?

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அரசியல் இலஞ்சமாக மதுபான உரிமங்களை வழங்கியுள்ளார். அவற்றைப் பெற்றுக்கொண்ட அரசியல்வாதிகளின் பெயர்களை வெளியிடப்போவதாகவும் உரிமங்களை இரத்துச் செய்வதாகவும் தேசிய மக்கள் சக்தி உறுதியளித்தது.

எனினும் மதுபான உரிமங்கள் குறித்த முழுமையான தகவல்கள் வெளியிடப்படவில்லை. அவ்வாறாயின் தேசிய மக்கள் சக்தியின் போக்கு என்னவென்பதை அறிந்துகொள்ள முடியும்.

தேர்தல் காலத்தில் அவர்கள் வழங்கிய வாக்குறுதிகள் எதுவும் நிறைவேற்றப்படவில்லை என்பதை மக்கள் நன்கு உணர்ந்துள்ளார்கள். ஊடகங்கள் மூலமாக பிரசித்தியடையும் நோக்கத்திலேயே தேர்தல்காலத்தில் அவர்களுடைய செயற்பாடு அமைந்தது என்பதை இப்போது தெரிந்துகொள்ளக் கூடியதாக உள்ளது - என்றார். (அ)



# வவுனியாவில் களைகட்டிய நத்தார் வியாபாரம்

வவுனியா, டிசெ. 24

வவுனியாவில் நத்தார் பண்டிகையை முன்னிட்டு வியாபாரம் களைகட்டியுள்ளது.

உலகம் பூராக இயேசுவின் பிறந்தநாளை கிருஸ்தவ மக்கள் நத்தார் பண்டிகையாக கொண்டாடுகின்றனர்.

அந்த வகையில் வவுனியாவிலும் நத்தார் பண்டிகையை கொண்டாடுவதற்காக புத்தாடைகள் மற்றும் பட்டாசுகள், கிறிஸ்மஸ் மரங்களையும் வேண்டிச் செல்வதை அவதானிக்க கூடியதாக இருந்தது. (எ- 10)

# கிளிநொச்சி மாவட்ட மீனவர்களுக்கு நேற்று சீனாவின் மீன்பிடி வலைகள்!

கிளிநொச்சி, டிசெ. 24

சீன அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட மீன்பிடி வலைகள், இன்று, கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த மீனவர்களுக்கு வழங்கப்பட்டன.

வடக்கு மாகாண மீனவர்களுக்கென கடந்த ஜனாதிபதி தேர்தலுக்கு முன்பு கொண்டுவரப்பட்ட மீன்பிடி வலைகள் நேற்று மீனவர்களுக்கு வழங்கப்பட்டன.

மாவட்ட கடற்றொழில் நீரியல் வளத் திணைக்கள அலுவலகத்தில், கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த தெரிவு செய்யப்பட்ட 870 மீனவர்களுக்கு தலா 6 வலைகள் மூலம் 5 ஆயிரத்து 220 வலைகள் பகிர்ந்தளிக்கப்படுவதாக கிளிநொச்சி மாவட்ட கடற்றொழில் நீரியல் வள திணைக்கள உதவிப் பணிப்பாளர் பாலசுப்பிரமணியம் இரமேஸ்கண்ணா தெரிவித்தார். (அ)

# ஜனாதிபதி நிதியத்திலிருந்து பணம் பெற்ற அரசியல்வாதிகளுக்கு எதிராக முறைப்பாடு

கொழும்பு, டிசெ. 24

ஜனாதிபதி நிதியத்திலிருந்து பணம் பெற்றுக்கொண்ட அரசியல்வாதிகளுக்கு எதிராக சட்டத்தரணிகள் குழுவொன்று பொலிஸ் தலைமையகத்தில் நேற்று முறைப்பாடு செய்துள்ளது.

இது தொடர்பில் சட்டத்தரணி சுரங்க பண்டார தெரிவிக்கையில் -

முன்னாள் அமைச்சர்களும் பாராளுமன்ற உறுப்பினர்களும் ஜனாதிபதி நிதியத்திலிருந்து பணம் பெற்றுக்கொண்டுள்ளதாக பாராளுமன்றத்தில் அரசதரப்பினரால் வெளிப்படுத்தப்பட்டது.

மருத்துவச் செலவுக்காக ஜனாதிபதி நிதியைப் பெற்றுக்கொள்வதற்கு பல்வேறு வரைமுறைகள் உள்ளன. ஆனால் அவை உரிய முறையில் பின்பற்றப்பட்டுள்ளனவா என்பதில் எமக்கு சந்தேகம் உள்ளது.

நிதியைப் பெற்றுக்கொள்வதற்கு மருத்துவச் சான்றிதழ்கள் உள்ளிட்ட ஆவணங்கள் சமர்ப்பிக்கப்பட்டிருக்க வேண்டும். வருமான வரி செலுத்துவது தொடர்பிலும் அதில் கவனம் செலுத்தப்படுகிறது.

அதுமாத்திரமன்றி நபர் ஒருவருக்கு குறிப்பிட்டதொரு தொகையே வழங்கப்பட்டு வந்துள்ளது.

இந்நிலையில் பாரிய தொகையை அரசியல்வாதிகள் பெற்றுக்கொண்டுள்ளனர்.

அவர்கள் சட்டவிரோதமாக பணத்தைப் பெற்றிருந்தால் அது மீளப்பெறப்படவேண்டும். அத்துடன் பொலிஸாரின் ஊடாக நீதிமன்ற நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவேண்டும் என்பதே எமது கோரிக்கைகளாகும் - என்றார். (அ)

# வர்த்தமானி வரும் வரை அரிசி இறக்குமதி இல்லை

## சுங்கத் திணைக்களம் தெரிவிப்பு

கொழும்பு, டிசெ. 24

அரிசி இறக்குமதிக்கான வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்படு வரை மீண்டும் அரிசியை நாட்டிற்கு இறக்குமதி செய்வதற்கான வாய்ப்புக்கள் இல்லை என இலங்கை சுங்கத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

தனியார் துறைக்கான அரிசியை இறக்குமதி செய்வதற்கு வழங்கப்பட்ட கால அவகாசம் கடந்த 20ஆம் திகதி நிறைவடைந்த நிலையில், அன்றைய தினம் 67,000 மெற்றிக் தொன் அரிசி நாட்டுக்கு இறக்குமதி செய்யப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும், அரிசியை இறக்குமதி செய்வதற்கான கால அவகாசம் அடுத்த வருடம் ஜனவரி மாதம் 10 ஆம் திகதி வரை நீடிக்கப்படும் என அரசாங்கம் அண்மையில் குறிப்பிட்டிருந்தது.

எவ்வாறாயினும், இது தொடர்பான வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்படாததால், அரிசியை அரசாங்கத்தினால் அல்லது அரசாங்கத்தின் தலையீட்டினால் அரிசி இறக்குமதி செய்தாலும், அதனை இலங்கை சந்தைக்கு விடுவிக்க முடியாது என இலங்கை சுங்கம் தெரிவித்துள்ளது.

எவ்வாறாயினும், அரிசி இறக்குமதி தொடர்பான வர்த்தமானி அறிவித்தல் இன்று (நேற்று) நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தின் பின்னர் வெளியிடப்படும் என அரசாங்க தகவல்கள் தெரிவிக்கின்றன. (அ)

# பாடசாலைகள் ஜன.02 ஆரம்பம்

கொழும்பு, டிசெ. 24

அரச மற்றும் அரச அங்கீகாரம் பெற்ற தனியார் பாடசாலைகளின், மூன்றாம் தவணையின் இரண்டாம் கட்டக் கல்வி நடவடிக்கைகளை ஆரம்பிப்பது தொடர்பில் கல்வி அமைச்சினால் அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

மூன்றாம் தவணையின் இரண்டாம் கட்ட கல்வி நடவடிக்கைகளை எதிர்வரும் 2 ஆம் திகதி ஆரம்பிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய மூன்றாம் தவணை கல்வி நடவடிக்கைகள் எதிர்வரும் ஜனவரி மாதம் 24 ஆம் திகதி நிறைவடையவுள்ளது.

உயர் தர பரீட்சை கடந்த நவம்பர் மாதம் 25 ஆம் திகதி ஆரம்பமானது. எனினும், சீரற்ற காலநிலை காரணமாக, 4 நாட்கள் பரீட்சைகள் ஒத்தி வைக்கப்பட்டன.

பின்னர் மீண்டும் 4 ஆம் திகதி பரீட்சை ஆரம்பமாகிய நிலையில், எதிர்வரும் 31 ஆம் திகதி நிறைவடையவுள்ளன.

அதனால் பாடசாலை கல்வி நடவடிக்கைகளை ஜனவரி 2 ஆம் திகதி ஆரம்பிக்க ... (அ)

# தனங்களப்புப் பிரதேசத்தில் அனுமதியின்றி பனை தறிப்பு!

## சாவகச்சேரி பொலிஸில் முறைப்பாடு

யாழ்ப்பாணம், டிசெ. 24

தனக்களப்பு பகுதியில் 25 இற்கும் மேற்பட்ட பனை மரங்கள் சட்டவிரோதமாக தொடர்ச்சியாக தறிக்கப்பட்டு வந்த நிலையில் பொதுமக்கள் வழங்கிய முறைப்பாட்டை அடுத்து பனை அபிவிருத்தி சபையால் சாவகச்சேரி பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது .

பனை அபிவிருத்தி சபையின் தலைவர் சகாதேவன் தெரிவிக்கையில்,

தனங்கிளப்புப் பகுதியில் தொடர்ச்சியாக சட்டவிரோதமாக பனை மரங்கள் வெட்டப்படுவதாக பனை அபிவிருத்திச் சபைக்கு முறைப்பாடு கிடைக்கப்பெற்றது.

முறைப்பாட்டின் அடிப்படையில் எமது உத்தியோத்தர்கள் குறித்த இடத்திற்கு விஜயம் மேற்கொண்ட நிலையில் அங்கு 25 இற்கும் மேற்பட்ட பனை மரங்கள் தறிக்கப்பட்டமை அவதானிக்கப்பட்டதுடன் கனகர இயந்திரங்கள் குறித்த பகுதியில் கொண்டுவரப்பட்டமையும் நேரடியாக அவதானிக்கப்பட்டது.

இள வயது பனைகள் பல தறிக்கப்பட்டும் அடிப்பாகங்கள் எயியூட்டப்பட்ட நிலையிலும் காணப்பட்டன.

சம்பவம் தொடர்பில் நெல்லியடியைச் சேர்ந்த காணி உரிமையாளர் சாவகச்சேரி பொலிஸ் நிலையம் வரவழைக்கப்பட்டுள்ள நிலையில் பொலிஸார் வழக்கு தாக்கல் செய்வதாக உறுதியளித்தனர்.

பனை மரங்களை வெட்டுவதற்காக எடுத்துவரப்பட்ட கனகர இயந்திரங்களை முறைப்பாட்டில் பதிவு செய்யுமாறு எமது உத்தியோகத்தர்கள் வலியுறுத்திய நிலையில் சாவகச்சேரி பொலிஸார் ஏற்க மறுத்துள்ளனர்.

இந்த சட்ட விரோத செயற்பாடுகளுடன் சாவகச்சேரி பொலிஸாருக்கு தொடர்பு இருப்பதாக சந்தேகம் எழுந்த நிலையில் அவர்களுடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டு வாகன இலக்கங்களை முறைப்பாட்டில் பதியாவிட்டால் மேலிடத்தில் முறைப்பாடு செய்யவேண்டி வரும் எனக் கூறிய நிலையில் முறைப்பாட்டை ஏற்பதாக தெரிவித்தனர்.

சட்ட விரோத பனை மரங்கள் தறிக்கப்பட்டால் 0779273042 பண்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு தகவல்களை தர முடியும் - என்றார். (அ)

# முன்னாள் ஜனாதிபதிகளின் முப்படை பாதுகாப்பு நீக்கம்

கொழும்பு, டிசெ. 24

முன்னாள் ஜனாதிபதிகளின் பாதுகாப்பு கடமைகளில் ஈடுபடுத்தப்பட்டிருந்த முப்படை வீரர்களை நேற்று முதல் அமுலாகும் வகையில் நீக்குவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இந்த விடயம் தொடர்பில் முப்படைத் தளபதிகளுக்கும் உரிய ஆலோசனைகள் வழங்கப்பட்டுள்ளதாக பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

அதற்கமைய, முன்னாள் ஜனாதிபதிகளின் பாதுகாப்புக் காக நேற்று முதல் பொலிஸ் அதிகாரிகள் மாத்திரம் தொடர்ந்தும் கடமையில் ஈடுபடுவார்கள் என பாதுகாப்பு அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

முன்னாள் ஜனாதிபதிகளின் பாதுகாப்பு கடமைகளில் போதுமான அளவு பொலிஸ் உத்தியோகத்தர்கள் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu
24.12.2024 செவ்வாய்க்கிழமை
பிலவ வருடம், மார்கழி 09

"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

## இந்தக் காலத்தில் செய்ய வேண்டியது?

தேசிய மக்கள் சக்தியின் சார்பில் வெற்றிபெற்ற தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்களில் ஒருவர் இவ்வாறு கேட்கின்றார் - அதாவது, யார் தமிழர் தரப்பு? இந்தக் கேள்வி சாதாரணமான ஒன்றல்ல - ஏனெனில் அவ்வாறு கேட்கக் கூடிய தகுதிநிலையோடு அவர்கள் இருக்கின்றனர். தனது புதுடில்லி விஜயத்தின் போதும் அநுரகுமார திஸநாயக்க தங்களுக்கு நாடு முழுவதிலுமுள்ள மக்கள் ஆணை வழங்கியிருக்கின்றனர் என்பதை அழுத்திக் குறிப்பிட்டிருக்கின்றார் - ஏனெனில் தமிழர் தாயகமாக அடையாளப்படுத்தப்படும் வடக்கு, கிழக்கில் மட்டக்களப்பு தவிர்ந்த அனைத்து மாவட்டங்களிலும் தேசிய மக்கள் சக்தி முதன்மையான வெற்றியை பெற்றிருக்கின்றது. இந்த நிலையில்தான் யார் தமிழர் தரப்பு என்னும் கேள்வியை அவர்கள் கேட்கின்றனர்.

நடந்து முடிந்த தேர்தலில் தமிழ் கட்சிகள் பிரிந்து போட்டியிடாவிட்டால் இந்த நிலைமை ஏற்பட்டிருக்காது - அநுர அலை எதிர்பாராத ஒன்று - அதனால்தான் இவ்வாறானதொரு பின்னடைவு ஏற்பட்டது இல்லாவிட்டால் தமிழ்த் தேசிய தரப்பே மேலோங்கியிருக்கும் - என்றவாறான வார்த்தை ஜாலங்களால் பயனில்லை. தமிழ்த் தேசியம் பேசும் கட்சிகள் பிரிந்து நின்று போட்டியிடுவதை தமிழ்மக்கள் எதிர்க்க விரும்பியிருந்தால், இருப்பவர்களில் தமிழ்த் தேசியத்தின் மீது உறுதியுள்ளவர்களை ஆதரித்திருக்க முடியுமல்லவா - ஏன் அவ்வாறு நிகழவில்லை.

தமிழரசு கட்சி தேவையில்லை - ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணி தவறானது - அது சின்னத்தை திருடிய கூட்டம் - இப்படித்தான் வாக்காளர்கள் சிந்தித்திருக்கின்றார்கள் என்றால் தங்களை இருப்பத்திநான்கு கரட் தமிழ்த் தேசிய காவலர்களாக அடையாளப்படுத்திவரும் கஜேந்திர குமார் பொன்னம்பலம் அணியைத்தானே மக்கள் தெரிவு செய்திருக்க வேண்டும் - ஏன் அவர்கள் தேசிய மக்கள் சக்தியின் பக்கமாக சாய்ந்தனர். அவ்வாறாயின் தமிழ் தேசிய அரசியலின் காவலர்களாக தங்களை அடையாளப்படுத்தும் எவரையுமே வடக்கு மாகாண மக்கள் ஏற்றுக்கொள்ளவில்லை என்பதுதானே பொருள்.

தோல்வியுற்ற பின்னர் அதற்கு விளக்கமளிப்பதில் பயனில்லை - தற்போதுள்ள நெருக்கடியான அரசியல் நிலைமையை எவ்வாறு எதிர்கொள்வது என்றுதான் சிந்திக்க வேண்டும் - அதற்கான உபாயங்கள் என்ன என்று சிந்திக்க வேண்டும். தற்போதுள்ள சூழலில் அனைத்து மக்களின் ஆதரவையும் பெற்றவர்கள் என்பதே ஜே.வி.பி தலைமையிலான தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தின் பலமாக இருக்கின்றது. அடுத்தது, மூன்றில் இரண்டுக்கும் அதிகமான பெரும்பாண்மை அவர்களிடமுண்டு. இந்த நிலையில் அவர்களால் தாங்கள் விரும்பும் எதனையும் செய்ய முடியும். இலங்கையின் வரலாற்றில் தமிழர்களின் குறுக்கீடுகளை உதாசீனம் செய்துதான் 1972 மற்றும் 1978 அரசியல் யாப்புக்கள் நிறைவேற்றப்பட்டன. அவ்வாறு அரசியல் யாப்பு நிறைவேற்றப்பட்ட போது சர்வதேசம் ஒன்றும் செய்யவில்லை - வெறும் பார்வையாளராகவே இருந்தது. இனியும் அப்படித்தான் இருக்கும்.

இந்த நிலையில் அரசியலமைப்பில் இருப்பவற்றை முழுமையாக அமுல்படுத்துவதன் ஊடாக, முன்நோக்கிச் செல்ல வேண்டும் என்னும் கோரிக்கை வடக்கு, கிழக்கிலிருந்து ஒன்றுபட்ட குரலாக வெளிவர வேண்டும். அரசியல் கட்சிகள், சிவில் சமூகக் குழுக்கள், மதத் தலைவர்கள், பல்கலைக்கழக சமூகம், கிராமிய அமைப்புக்கள் என அனைத்தும் ஒன்றுதிரண்டு இந்த நிலைப்பாட்டை முன்வைக்க வேண்டும். இவ்வாறு செய்வதன் மூலம் அரசியலமைப்பில் இருப்பவற்றை அப்படியே பேண வேண்டும் என்னும் அழுத்தத்தை ஏற்படுத்தலாம். புதிய அரசியல் யாப்பு வரட்டும் என்று அமைதியாக இருந்தால் இறுதியில் இருப்பதும் பறிபோகும் நிலைமையே ஏற்படும்.

## மருத்துவமனை பொறுப்பதிகாரியின் இடமாற்றத்தை இரத்துச் செய்யுங்கள்

யாழ்ப்பாணம், டிசெ. 24

யாழ்ப்பாணம், வட்டுக்கோட்டை பிரதேச மருத்துவமனையின் பொறுப்பு வைத்திய அதிகாரி செந்தூரனின் இடமாற்றத்தை இரத்துச் செய்ய நடவடிக்கை எடுக்குமாறு பாராளுமன்ற உறுப்பினர் எஸ். பவானந்தராஜாவிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

நோயாளர் நலன்புரிச் சங்கத்தினர், சமூக மட்ட அமைப்பினர்கள் - பாராளுமன்ற உறுப்பினர் இடையே நேற்று நடைபெற்ற கலந்துரையாடலின் போதே மேற்கண்டவாறு கோரிக்கை விடுக்கப்பட்டது.

மேலும், இந்த மருத்துவமனை பிரதேச மருத்துவமனை தரத்தில் காணப்படுகின்றது. ஆனால், அதற்குரிய ஆளணி வசதிகள் இல்லை. கட்டட வசதிகள் தாராளமாக உள்ளன.

கடந்த காலங்களில் 24 மணிநேர மருத்துவ வசதிகளும், சிகிச்சைகளும் வழங்கப்பட்டன. ஆனால், பின்னர் அவை எல்லாம் இடைநிறுத்தப்பட்டன. இருப்பினும், தற்போது கடமையில் இருக்கின்ற பொறுப்பு வைத்திய அதிகாரி செந்தூரனின் முயற்சியாலேயே மீண்டும் நோயாளர் விடுதி இயக்கப்படுகின்றது.



மக்களுக்கு சேவை செய்வதற்கே அனைத்து அரச திணைக்களங்களும், அரச அதிகாரிகளும் உள்ளனர். எனவே, மக்களாகிய எமது கோரிக்கைகளை செவிமடுத்து எமது மருத்துவமனையின் முன்னேற்றத்துக்கு வழிவகுக்கும் முகமாக குறித்த வைத்திய அதிகாரியின் இடமாற்றத்தை இடைநிறுத்தி அல்லது தள்ளிப்போட்டு மக்களது நலனிலும் மருத்துவமனையின் வளர்ச்சியிலும் அக்கறை செலுத்த வேண்டும் என கோரிக்கை விடுத்தனர். அத்துடன் தமது கோரிக்கைகள் அடங்கிய மகஜரையும் பாராளுமன்ற உறுப்பினரிடம் கையளித்தனர். (எ-5)

## நெடுந்தீவிலிருந்து இறைச்சியுடன் வந்த பொலிஸ் உத்தியோகத்தர் மடக்கிப்பிடிப்பு

யாழ்ப்பாணம், டிசெ. 24

நெடுந்தீவில் இருந்து விடுமுறையில் சென்ற பொலிஸ் உத்தியோகத்தர் கொண்டு வந்த பொதியில் இறைச்சி இருப்பதாக சந்தேகித்து அதனை குறிகாட்டுவானில் வைத்து சோதனையிட்ட போது, அதில் இறைச்சி இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது.

கால்நடைகளை பறிகொடுத்த இளைஞர்கள் கடற்படையினரின் உதவியுடன் பரிசோதனை செய்தபோது இறைச்சி இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது.

இதன் பின்னர் குறித்த பொலிஸாருடன், பொதியும் குறிகாட்டுவானில் கடற்படையினரின் உதவியுடன் தடுத்து வைத்துவிட்டு யாழ். அரச அதிபர், நெடுந்தீவு பிரதேச செயலருக்கு தகவல் வழங்கப்பட்டதுடன், இது தொடர்பில் வேலணை பிரதேச செயலருக்கும் தகவல் தெரிவிக்கப்பட்டது.

ஊர்காவற்றுறை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி தலைமையிலான குழுவினர் குறிகாட்டுவான் சென்று விசாரணைகளை மேற்கொண்டதுடன் நெடுந்தீவில் ஆடு, காணாமல் போன இளைஞரிடம் முறைப்பாட்டினை பெற்றதுடன் கைப்பற்றப்பட்ட இறைச்சி ஆட்டிறைச்சியா, மாட்டிறைச்சியா என ஆய்வு செய்த பின்னர் தகவல் வழங்குவதாக தெரிவித்ததுடன் குறித்த இளைஞர்களை அங்கிருந்து செல்லுமாறு அனுப்பிவைத்துள்ளதாக தெரியவருகிறது.

(எ-05)

## வடமராட்சி கிழக்கு பகுதியில் நேற்று கரையொதுங்கிய படகு

வடமராட்சி, டிசெ. 24

வடமராட்சி கிழக்கு, உடுத்துறை ஐந்தாம் பனையடி கடற்கரை பகுதியில் படகு ஒன்று நேற்றுக் காலை கரையொதுங்கியுள்ளது.

ஓ. எவ். ஆர். பி. - 6224 ஜே. எவ். என். என்னும் இலக்கமுடைய படகே ஆட்கள் யாருமற்ற நிலையில் கடலில் மிதந்து வந்து கரையொதுங்கியுள்ளதாக அப் பகுதி மக்கள் அதிகாரிகளுக்கு தகவல் கொடுத்தனர்.


இதனடிப்படையில் சம்பவ இடத்துக்கு வருகை தந்த வடமராட்சி கிழக்கு கடற்றொழிலாளர் சங்க சமாச தலைவர் மற்றும் பொலிஸார் படகை பார்வையிட்டதுடன் நீரியல்வளத் திணைக்கள அதிகாரிகளுக்கும் தெரியப்படுத்தினர்.



இயந்திரமற்று கரையொதுங்கிய குறித்த படகை கடத்தல்காரர்கள் பயன்படுத்தியிருக்கலாம் என பொலிஸார் சந்தேகிப்பதுடன் மேலதிக விசாரணைகளையும் மேற்கொண்டு வருகின்றனர்.

(எ-02)

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு




**மேடம்**
ராஜதந்திரமாக செயல்பட்டு சில காரியங்களை முடிப்பீர்கள். அதிகார பதவியில் இருப்பவர்களின் நட்பு கிடைக்கும். உறவினர், நண்பர்கள் மத்தி யில் அந்தஸ்து உயரும். திடீர் யோகம் கிட்டும் நாள்.

**இடபம்**
உங்களைச் சுற்றியிருப்பவர்களில் நல்லவர்கள் யார் என்பதை கண்டறிவீர்கள். நட்பால் ஆதாயம் உண்டு. நீண்டநாள் பிரார்த்தனையை நிறை வேற்றுவீர்கள். வேற்றுமதத்தவர் அறிமுகமாவார்.

**மிதுனம்**
எதிர்பார்த்தவைகளில் சில தள்ளிப் போனாலும் எதிர்பாராத ஒரு வேலை முடியும். பழைய கடனைப் பற்றி அவ்வப்போது யோசிப்பீர்கள். தாயாருக்கு வீண் டென்ஷன் வந்துப்போகும்.

**கடகம்**
குடும்பத்தில் சுப நிகழ்ச்சிகளில் கலந்துக் கொள் வீர்கள். பூர்வீக சொத்துப் பிரச்னைக்கு சுமூக தீர்வு கிடைக்கும். விருந்தினர்களின் வருகையால் வீடு களைக்கட்டும். சாதிக்கும் நாள்.

**சிம்மம்**
நீண்ட நாள் பிரச்னைகளுக்கு தீர்வு கிடைக்கும். கணவன்-மனைவிக்குள் இருந்த மனக்கசப்பு நீங்கும். எதிர்பார்த்த இடத்திலிருந்து நல்ல செய்தி வரும். மகிழ்ச்சியான நாள்.

**கன்னி**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் சிலர் விமர்சனங் களுக்கும் கேலிப் பேச்சிற்கும் ஆளாவீர்கள். யாரை நம்புவது என்கிற மன குழப்பத்திற்கு ஆளாவீர்கள். நேர்மறை எண்ணங்கள் தேவைப்படும் நாள்.

**துலாம்**
விடாப்பிடியாக செயல்பட்டு சில வேலைகளை முடிப்பீர்கள். பிள்ளைகளால் டென்ஷன் அதிகரிக் கும். எவ்வளவு பணம் வந்தாலும் பற்றாக் குறை நீடிக்கும். அலைச்சலுடன் ஆதாயம் தரும் நாள்.

**விருச்சிகம்**
தன்னம்பிக்கையுடன் பொதுக் காரியங்களில் ஈடுபடுவீர்கள். பெற்றோரின் ஒத்துழைப்பு அதி கரிக்கும். விசேஷங்களை முன்னின்று நடத் துவீர்கள். மதிப்புக் கூடும் நாள்.

**தனுசு**
உறவினர் நண்பர்கள் உங்களுக்கு முக்கியத் துவம் தருவார்கள். உங்களால் பயனடைந்தவர் கள் இப்போது உங்களுக்கு உதவி செய்வார்கள். உங்களின் நிர்வாகத் திறமை வெளிப்படும்.

**மகரம்**
இதுவரை இருந்த சோர்வு அசதி நீங்கி உற்சாகம் அடைவீர்கள். குடும்பத்தில் அமைதி திரும்பும். அரை குறையாக நின்ற வேலைகள் முடியும். புது அத்தியாயம் தொடங்கும் நாள்.

**கும்பம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் சிக்கலான சவாலான காரியங்களையெல்லாம் கையில் எடுத்துக் கொண்டிருக்காதீர்கள். சிலரின் தவறுகளை சுட் டிக் காட்டுவதன் மூலம் சச்சரவுகளில் சிக்குவீர்கள்.

**மீனம்**
உங்களின் அறிவாற்றலை வெளிப்படுத்த நல்ல வாய்ப்புகள் வரும். விலை உயர்ந்த ஆபரணங்கள் வாங்குவீர்கள். சகோதரர்களின் அரவ ணைப்பு அதிகரிக்கும். தாயாரின் உடல் நிலை சீராகும்.


# பழைய கட்டடங்களை புனரமைக்க அனைவரும் ஒத்துழைப்பு வழங்குக

## வடமாகாண ஆளுநர் வேதநாயகன் கோரிக்கை

யாழ்ப்பாணம், டிசெ.24

2025 இல் பழைய கட்டடங்களை புனரமைப்பதற்கு யாழ். மாநகர சபை நடவடிக்கை எடுத்து வருகின்றது. அதற்கு எங்களது ஒத்துழைப்பும் இருக்கும். உங்களது ஒத்துழைப்புகளையும் வழங்குங்கள் என்று வடக்கு மாகாண ஆளுநர் நா. வேதநாயகன் தெரிவித்தார்.

யாழ். மாநகர சபையால் உள்ளூர் அபிவிருத்தி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் 52. 5 மில்லியன் ரூபாய் செலவில் மீள் நிர்மாணம் செய்யப்பட்ட பண்ணை மீன் சந்தைக் கட்டடம் வடக்கு மாகாண ஆளுநரால் திறந்து வைக்கப்பட்டது.



"யாழ்ப்பாணம் கடந்த காலங்களில் தூய்மையான நகரமாக இருந்தது. இன்று மோசமாக இருக்கின்றது. தூய்மையான அழகான நகரமாக யாழ்ப்பாணத்தை மாற்றியமைக்கும் பொறுப்பு எங்கள் ஒவ்வொருவருக்கும் இருக்கின்றது" என ஆளுநர் இதன்போது குறிப்பிட்டார். (எ-05)

# "பால்நிலை சமத்துவம் பற்றி உரிய விழிப்புணர்வு இல்லை"

யாழ்ப்பாணம், டிசெ.24

வடபகுதி மக்கள் மத்தியில் பால்நிலை சமத்துவம் பற்றி சரியான விழிப்புணர்வு காணப்படவில்லை என்று இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். பிராந்திய இணைப்பாளர் த. கனகராஜ் தெரிவித்தார்.

பால்நிலை சமத்துவம் தொடர்பில் மக்களுக்கு தெளிவூட்டும் வேலைத்திட்டம் ஒன்று யாழ்ப்பாணம், கொக்குவிலில் முன்னெடுக்கப்பட்டது. இதன்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

மேலும், பாராளுமன்றத் தேர்தலில் வடக்கு மாகாணத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் பெண் பிரதிநிதிகள் எவரும் தெரிவு செய்யப்படவில்லை. பெண்களை தெரிவு செய்ய வேண்டும், பால்நிலை சமத்துவத்தை பேண வேண்டும் என்பதில் மக்கள் சரியான அக்கறை கொள்வதில்லை என்றும் அவர் கூறினார். (எ)

# 23 கணித பாட ஆசிரியர்களுக்கு பற்றாக்குறை

வவுனியா,டிசெ.24

வவுனியா தெற்கு வலயத்தில் 23 கணித பாட ஆசிரியர்கள் பற்றாக்குறையாக இருப்பதாக இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கம் சுட்டிக்காட்டியுள்ளது.

இது தொடர்பில் அந்தச் சங்கத்தின் வவுனியா தெற்கு வலய செயலாளர் கி. வசந்தரூபன் விடுத்துள்ள அறிக்கையில், வவுனியா தெற்கு வலயப் பாடசாலைகளில் தற்போதும் பல பாடங்களுக்கு ஆசிரியர் பற்றாக்குறை காணப்படுகின்றது. இதனை ஆசிரியர் இடமாற்றங்கள் மற்றும் நியமனங்களின் போது வடக்கு மாகாண கல்வி அமைச்சு கவனம் செலுத்தி நடவடிக்கை எடுக்க வேண்டும்.

குறிப்பாக வவுனியா தெற்கு வலயத்தில் 23 கணித பாட ஆசிரியர்களுக்கு பற்றாக்குறை நிலவுவதுடன் 2 விஞ்ஞான பாட ஆசிரியர்களும் பற்றாக்குறையாக உள்ளன. அத்துடன் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப பாடத்துக்கு 7 ஆசிரியர்களும் பற்றாக்குறையாக உள்ளன என அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (எ-10)

# முதலை தாக்கி வயோதிபப் பெண் பலி!

வவுனியா, டிசெ.24

வவுனியாவில் முதலை தாக்கியதில் சூடுவெந்தபுலவை சேர்ந்த வயோதிபப் பெண் ஒருவர் உயிரிழந்தார் என்று உலுக்குளம் பொலிஸார் தெரிவித்தனர். மாடுகளை மேய்ப்பதற்காக பாவற்குளம் - சூடுவெந்த புலவு பகுதிக்கு சென்ற வேளை ஆற்றுப்பகுதியில் இறங்கிய போதே முதலையின் தாக்குதலுக்கு இலக்காகி பலியானார். 67 வயது ஆதம்பாவா முசிறியா என்பவரே இவ்வாறு உயிரிழந்தார். (எ- 10)

# பந்தள ராஜகுமார ஐயப்பன் கோவிலில் சிறப்பாக நடைபெற்ற நாகராஜ பூசை

வடமராட்சி, டிசெ. 24

தும்பளை கிழக்கு கடற்கரை கறுப்பு சாமி பந்தளராஜ குமார ஐயப்பன் தேவஸ்தானத்தின் 16 ஆம் நாள் பூசையான நாகராஜ பூசை நேற்று முன்தினம் சிறப்பாக நடைபெற்றது.

இதில் பருத்தித்துறையை சேர்ந்த ஐயப்பன் பக்தர்கள், அடியவர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (எ-02)



# வவுனியாவில் பெண் உட்பட ஐவர் கைது

வவுனியா, டிசெ. 24

வவுனியா, ஓமந்தை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் பொலிஸார் முன்னெடுத்த விசேட நடவடிக்கையில் ஒரு பெண் உட்பட ஐவரை பொலிஸார் கைது செய்தனர்.

திறந்த பிடியாணையின் கீழ் ஒருவரையும், திகதியிடப்பட்ட பிடியாணையின் கீழ் நால்வர் என ஐவரை பொலிஸார் இவ்வாறு கைது செய்ததுடன் அவர்களை வவுனியா மாவட்ட நீதிவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்த நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பயணிகளை ஏமாற்றிவரும் கொழும்பு - யாழ். பஸ்கள்!

## அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க கோரிக்கை

கொழும்பு, டிசெ. 24

**கொழும்பு - யாழ்ப்பாணம் இடையேயான போக்குவரத்து சேவையில் ஈடுபடுவதாக காட்சிப்பலகை காட்சிப்படுத்தப்பட்ட பஸ்கள் சில பயணிகளை தொடர்ச்சியாக ஏமாற்றி வருவதாக பயணிகள் விசனம் வெளியிட்டுள்ளனர்.**

கொழும்புக்கும் யாழ்ப்பாணத்துக்கும் இடையே போக்குவரத்து சேவையில் ஈடுபடுவதாக சில பஸ்களில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

ஆனால் அந்த பஸ்களில் யாழ்ப்பாணம் நோக்கி பயணிக்கும் பயணிகள் மதவாச்சி அல்லது வவுனியா பகுதிகளில் இறக்கி விடப்படுகின்றனர்.

இவ்வாறு இறக்கி விடும் போது "பின்னால் வேறு பஸ் வருகின்றது.

நீங்கள் அந்தப் பஸ்ஸில் யாழ்ப்பாணத்துக்கு பயணிக்கலாம்.

அந்த பஸ்ஸுக்கு கட்டணம் செலுத்த தேவையில்லை" என கூறப்படுகிறது.

கொழும்பில் இருந்து பயணச் சீட்டுகள் யாழ்ப்பாணத்துக்கு என பதிவு செய்யப்பட்ட பின்னர் சிலவேளைகளில் கொழும்பில் இருந்து வவுனியா அல்லது மதவாச்சி பகுதிக்கான கட்டணத்தை மாத்திரம் பெற்றுக்கொண்டு மிகுதி பணம் மீளவும் பயணிகளிடம் வழங்கப்படுகின்றது.

பயணிகள் அடுத்த பஸ் வரும் வரைக்கும் காத்திருக்க வேண்டிய தேவை ஏற்படுகிறது.

மேற்படி மோசடியில் ஈடுபடும் பஸ்களில் பயணிக்கும் பயணிகள் அனைவரும் தேவையற்று நேரத்தை செலவழிக்க வேண்டிய தேவை ஏற்படுவதுடன் சில பஸ்களில் பயணிக்கும் பயணிகள் தமது பணத்தையும் இழக்க வேண்டிய சூழ்நிலை ஏற்படுகிறது.

இந்த செயற்பாடுகள் உரிய அதிகாரிகளுக்கு தெரிந்து நடக்கின்றதா அல்லது தெரியாமல் நடக்கின்றதா என்ற கேள்விகள் எழுவதாக பயணிகள் தெரிவித்துள்ளனர்.

கடந்த சில வாரங்களுக்கு முன்னரும் இவ்வாறான ஒரு சம்பவம் வெளிவந்த நிலையிலும் அதிகாரிகள் உரிய நடவடிக்கைகளை எடுப்பது போல தெரியவில்லை என மக்கள் விசனம் வெளியிட்டுள்ளனர். (அ)

# ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பின் சார்பாகவே இனி தேர்தல்களில் போட்டி!

## புதிய ஜனநாயக முன்னணி அறிவிப்பு

கொழும்பு, டிசெ. 24

ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பின் சார்பாகவே எதிர்காலத்தில் இடம்பெறும் தேர்தல்களை சந்திக்கவுள்ளதாக புதிய ஜனநாயக முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் பைசர் முஸ்தபா தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-புதிய ஜனநாயக முன்னணியின் தேசியப்பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினராக நான் தெரிவானதன் பின்னர் பலர் விமர்சனங்களை முன்வைக்கிறார்கள். அதுபற்றி எனக்கு கவலை கிடையாது.

சுதந்திரக் கட்சியின் உறுப்பினர்களே என்னைத் தெரிவு செய்தனர்.

ஏதிர்வரும் தேர்தல்களில் எரிவாயு சிலிண்டர் சின்னத்தில் போட்டியிட மாட்டோம். சுதந்திரக் கட்சி தலைமையிலான ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பிலேயே தேர்தலை சந்திக்கவுள்ளோம்.

பொருளாதார ரீதியான அழுத்தம் மற்றும் ஊழல் அதிகரிப்பு காரணமாகவே தேசிய மக்கள் சக்திக்கு மக்கள் வாக்களித்தனர். நாட்டில் செயற்பாடுகளை முன்னெடுப்பதற்கு அந்தக் கட்சிக்கு கால அவகாசம் வழங்க வேண்டும்.

மேலும், கொரோனா தொற்றினால் உயிரிழந்த முஸ்லிம்களின் உடல்களை தகனம் செய்வதற்கு கோட்டாபய ராஜபக்ஷவின் அரசாங்கம் தீர்மானம் மேற்கொண்டமை பாரிய தவறான செயல். முஸ்லிம் சமூகத்தை பழிவாங்குவதற்காகவே அவ்வாறான செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டன. அந்த விடயம் ஆதாரபூர்வமாக நிரூபிக்கப்படும் பட்சத்தில் நாம் சட்ட ரீதியான நடவடிக்கைகளை எடுப்போம்-என்றார். (அ)

# மனைவியை தாக்கி விட்டு உயிர் மாய்த்தார் கணவன்

கொழும்பு, டிசெ. 24

மொரட்டுவை, இந்திபெத்த பிரதேசத்தில் கணவர் ஒருவர் தனது மனைவியை கூரிய ஆயுதத்தால் தாக்கி விட்டு தற்கொலை செய்து கொண்டுள்ளார்.

56 வயதுடைய ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த நபர் தனது மனைவியை கூரிய ஆயுதத்தால் தாக்கி விட்டு பின்னர் வீட்டில் தூக்கிட்டு தற்கொலை செய்து கொண்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

காயமடைந்த பெண், பாணந்துறை வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருவதாக பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவத்திற்கு முன்னர் அவர், அயல் வீட்டில் இருந்த நபரொருவரையும் கூரிய ஆயுதத்தால் தாக்கி காயப்படுத்தியுள்ளார்.

தாக்குதலில் படுகாயமடைந்த நபர், கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருவதாகவும், சிறிது காலமாக நிலவி வந்த தகராறே இந்த தாக்குதலுக்கு காரணமென பொலிஸார் நடத்திய முதற்கட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது. (அ)

## எழுத்தாளர் கசுன் மகேந்திர கைது

# உப பொலிஸ் பரிசோதகர் உட்பட மூவருக்கு தற்காலிகமாக மாற்றம்

கொழும்பு, டிசெ. 24

எழுத்தாளர் கசுன் மகேந்திர ஹினட்டிகலவை அதுருகிரிய பொலிசார் கைது செய்தமை தொடர்பில், உப பொலிஸ் பரிசோதகர் உட்பட மூவர் மிரிஹான தலைமையக பொலிஸ் நிலையத்துக்கு தற்காலிகமாக இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

இலஞ்ச ஊழல் ஒழிப்புப் பிரிவின் பொறுப்பதிகாரி மற்றும் இரண்டு பொலிஸ் கான்ஸ்டபிள்களுமே தற்காலிகமாக இடமாற்றம் செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சட்டத்தரணி புத்திக மனதுங்க தெரிவித்துள்ளார்.

மறைந்த ஜெக்சன் அன்ரனியின் மருமகனான கசுன் மகேந்திர ஹினட்டிகல, பொலிஸ் தலைமையகத்தில் மேற்கொண்ட முறைப்பாடு தொடர்பில் கொழும்பு தெற்கிற்கு பொறுப்பான பிரதிப் பொலிஸ் மா அதிபரின் ஆலோசனையின் பேரில் இந்த இடமாற்றங்கள் வழங்கப்பட்டுள்ளன.

தம்மை பொலிஸ் அதிகாரிகள் வீதியில் வைத்து பலவந்தமாக கைது செய்து பொலிஸ் நிலையத்திற்கு அழைத்துச் சென்று துன்புறுத்தியதாக கசுன் மகேந்திர ஹினட்டிகல தெரிவித்துள்ளார். (அ)

# தேசிய பாடசாலைகளில் வெற்றிடமாக உள்ள அதிபர் பதவிகளை நிரப்புவதற்கு நடவடிக்கை

கொழும்பு, டிசெ. 24

தேசிய பாடசாலைகளில் வெற்றிடமாக உள்ள இலங்கை கல்வி நிர்வாக சேவை தரம் 1 அதிபர் பதவி வெற்றிடங்களை நிரப்புவது தொடர்பான விசேட அறிவிப்பை கல்வி அமைச்சு வெளியிட்டுள்ளது.

அரச சேவை ஆணைக்குழுவின் கல்விச் சேவைக் குழுவின் பணிப்புரைக்கு அமைவாக இலங்கை கல்விச் சேவையின் தரம் 1 உத்தியோகத்தர்களிடமிருந்து அந்தப் பாடசாலைகளில் உள்ள வெற்றிடங்களை நிரப்புவதற்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

விண்ணப்பங்கள் கோருவதற்காக சிங்களம் மற்றும் தமிழ் மொழிகளில் தயாரிக்கப்பட்ட அறிவிப்பு, பாடசாலைப் பதிவு, மதிப்பெண் நடைமுறை, மாதிரி விண்ணப்பப்படிவங்கள் என்பன கடந்த 11ஆம் திகதி கல்வி அமைச்சின் இணையத்தளத்தில் வெளியிடப்பட்டுள்ளதாக அமைச்சு மேலும் தெரிவித்துள்ளது.

அந்த அறிவிப்பின்படி, இணையதளத்தில் உள்ள "விசேட விளம்பரங்கள்" பிரிவின் கீழ் விண்ணப்பத்தை பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

விண்ணப்பங்களை சமர்ப்பிக்கும் இறுதித்திகதி டிசம்பர் 31ஆம் திகதி என கல்வி அமைச்சு விடுத்துள்ள அறிவிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# ஐ.நா. சனத்தொகை நிதிய பிரதிநிதி அமைச்சர் நளிந்தவுடன் சந்திப்பு

கொழும்பு, டிசெ. 24

சுகாதார மற்றும் வெகுசன ஊடக அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸவுக்கும் ஐக்கிய நாடுகளின் சனத்தொகை நிதியத்தின் இலங்கைக்கான பிரதிநிதி குன்லே அதெனியிக்கும் இடையில் சந்திப்பொன்று நடைபெற்றுள்ளது.

ஐக்கிய நாடுகளின் சனத்தொகை நிதியத்தின் பங்களிப்புடன் நாட்டில் நடைமுறைப்படுத்தப்படும் திட்டங்கள் தொடர்பில் புரிந்துணர்வைப் பெற்று ஒத்துழைப்பை மேம்படுத்தும் நோக்கில் இந்த சந்திப்பு நடைபெற்றதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாட்டில் இலவச சுகாதார சேவையை முன்னேற்றுவதற்கு ஐக்கிய நாடுகளின் மக்கள் தொகை நிதியம் தொடர்ந்து ஆதரவளிப்பதாக இதன் போது உறுதியளிக்கப்பட்டுள்ளது. (அ)

# ஆசிய அபிவிருத்தி வங்கியின் பணிப்பாளர் பிரதமருடன் பேச்சு

கொழும்பு, டிசெ. 24

பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய மற்றும் ஆசிய அபிவிருத்தி வங்கியின் இலங்கைக்கான பணிப்பாளர் டகாபுமி கடோனோவுக்கும் இடையில் சந்திப்பொன்று இடம்பெற்றுள்ளது.

பிரதமர் அலுவலகத்தில் இந்த சந்திப்பு இடம்பெற்றதாகப் பிரதமர் ஊடகப்பிரிவு தெரிவித்துள்ளது.

புதிய கல்விச் சீர்திருத்தங்கள் வெற்றிகரமாகச் செயற்படுத்தப்படுவதை உறுதிசெய்ய பாடசாலைக் கட்டமைப்பு, அதிபர், ஆசிரியர் பயிற்சி மற்றும் மதிப்பீட்டு பொறிமுறைகளை மேம்படுத்துவதன் முக்கியத்துவத்துவம் குறித்து இதன்போது ஆராயப்பட்டுள்ளது. (அ)

# சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை இந்த ஆண்டில் 19 இலட்சத்தைக் கடந்தது

கொழும்பு, டிசெ. 24

இந்த ஆண்டின் இதுவரையான காலப்பகுதியில் நாட்டுக்கு வருகை தந்த வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை 19 இலட்சத்தைக் கடந்துள்ளதாக சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

அதிக எண்ணிக்கையிலான வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் இந்தியாவில் இருந்து வந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இதன்படி, குறித்த காலப்பகுதியில் இந்தியாவில் இருந்து 3 இலட்சத்து 83 ஆயிரத்து 257 சுற்றுலாப் பயணிகள் நாட்டுக்கு வந்துள்ளனர்.

அத்துடன், 1 இலட்சத்து 80 ஆயிரத்து 414 பேர் ரஷ்யாவில் இருந்தும், 1 இலட்சத்து 66 ஆயிரத்து 999 பேர் பிரித்தானியாவில் இருந்தும் நாட்டுக்கு வருகை தந்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்த அரசுக்கு சவாலான பிரதான நபராக ரணில்!

## சுட்டிக்காட்டுகிறார் உதய கம்மன்பில

கொழும்பு, டிசெ. 24

**முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இந்த அர சாங்கத்துக்கு சவால் விடும் பிரதான நபராக செயற்படலாம். பொருளாதார நெருக்கடியில் இருந்து குறுகிய காலத்தில் மீட்சிப் பெற்றமை குறித்து வங்குரோத்து நிலையடைந்துள்ள உலக நாடுகள் ரணில் விக்கிரசிங்கவிடம் ஆலோசனை பெறுகின்றமை சிறப்பம்சமாகும் என முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் உதய கம்மன்பில தெரிவித்தார்.**

சமகால அரசியல் நிலை வரம் குறித்து ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கை யில்-அரசியலில் இருந்து முழு மையாக ஒய்வு பெறவில்லை. செயற்பாட்டு ரீதியிலான அரசி யலில் ஈடுபட்டுள்ளோம். வெற்றியும், தோல்வியும் என்றும் நிலையானதல்ல, 2020 ஆம் ஆண்டு பெரும்பான்மை ஆத ரவுடன் வெற்றிப் பெற்ற பொதுஜன பெரமுன 2024 ஆம் ஆண்டு படுதோல்வியடைந் தது. அதேபோல் அன்று 3 ஆசனங்களை பெற்ற தேசிய மக்கள் சக்தி இன்று 159 ஆசனங்களை கைப்பற்றியுள் ளது. ஆகவே அரசியலில் ஏதும் நடக்கலாம்.

முன்னாள் ஜனாதிபதி மகிந்த அரசியலில் இருந்து ஒய்வு பெற்றுள்ளார். பொதுஜன பெரமுனவின் தலைமைத்துவத்தை பாரா ளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷவுக்கு வழங்குவதற்கு அவதானம் செலுத்தப்பட்டுள்ளது.

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அரசியலில் இருந்து ஒய்வு பெறவில்லை. இந்த அரசாங்கத்துக்கு சவால் விடுக்கும் பிரதான நபராக அவர் செயற்படலாம். ஏனெ னில் அவரது பொருளாதார கொள்கைகளையே ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க செயற்படுத்துகிறார்.

2022 ஆம் ஆண்டு நாடு வங்குரோத்து நிலையடைந்த போது தனிநபராகவே ரணில் விக்கிரமசிங்க அரசாங்கத்தை பொறுப்பேற்றார். குறுகிய காலப்பகுதியில் நாடு வங்கு ரோத்து நிலையில் இருந்து மீண்டது. பல ஆண்டுகாலமாக வங்குரோத்து நிலையில் உள்ள ஆர்ஜென்ரீனா, லைபனான், சிம்பாப்வே நாடுகள் இன்றும் வங்குரோத்து நிலையில் இருந்து மீளவில்லை.

முன்னாள் ஜனாதிபதிகளான சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க, ரணில் விக்கிரம சிங்க ஆகியோருக்கு மேற்குலக நாடுகள் மத்தியில் நன்மதிப்பு காணப்படுகிறது, ஏனைய ஜனாதிபதிகளை காட்டிலும் ரணில் விக்கிரசிங்க ஆங்கில மொழியில் தேர்ச்சி பெற்றவர்.

குறுகிய காலத்தில் இலங்கை எவ்வாறு வங்குரோத்து நிலை யில் இருந்து மீண்டது என்பது தொடர்பில் இன்றும் வங்கு ரோத்து நிலையில் உள்ள உலக நாடுகள் முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் ஆலோசனை பெறுவது சிறந்த தொரு விடயமாகும்-என்றார். (அ)

# வாகன விபத்துக்களினால் 2024 இல் 2,243 உயிரிழப்பு!

கொழுபு, டிசெ. 24

வாகன விபத்துக்களால் நடப்பாண்டின் ஜனவரி 1 முதல் டிசம்பர் 13 வரை வீதி விபத்து களில் 2 ஆயிரத்து 243 பேர் உயிரிழந்துள்ளதாக பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

இந்தக் காலகட்டத்தில் மொத்தம் 22 ஆயிரத்து 967 வீதி விபத்துகள் பதிவு செய்யப் பட்டுள்ளதாகவும், அதில் 2 ஆயிரத்து 141 விபத்துகளில் மர ணம் சம்பவித்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், 6 ஆயிரத்து 500 கடுமையான விபத்துகளும் 9 ஆயிரத்து 127 சிறு விபத்துகளும் பதிவாகியுள்ளன.

இதேவேளை, நேற்று முன் தினம் இடம்பெற்ற வீதி விபத் துகளில் 5 பேர் உயிரிழந்துள்ள துடன்56 பேர் காயமடைந்துள்ளனர்.

தெற்கு அதிவேக நெடுஞ்சா லையில் பத்தேகமவுக்கும் பின்னதுவைக்குமிடையில் இடம்பெற்ற விபத்தில் இருவர் உயிரிழந்துள்ளதுடன், வேனும் லொறியும் மோதி விபத்துக் குள்ளானதில் 6 பேர் காயம டைந்துள்ளனர்.

கடுகண்ணா வையில் பஸ் ஒன்று மரத்தில் மோதியதில் 10 பேர் காயம டைந்துள்ளனர்.

இந்த நிலையில், பண்டிகைக் காலங்களில் விபத்துகளைக் குறைக்கத் தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கை களை எடுக்குமாறு பொதுமக் களை பொலிஸார் கேட்டு டுள்ளனர். (அ)

# பஸ்களில் விசேட சோதனை

கொழும்பு, டிசெ. 24

நாடளாவிய ரீதியில் பய ணிகள் போக்குவரத்து பேருந்து விசேட சோதனை நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

வீதி விபத்துக்கள் அதிகரித் துள்ளமையினால் பதில் பொலிஸ் மா அதிபர் பிரியந்த வீரசூரிய இந்த சோதனை நடவ டிக்கையை ஆரம்பித்துள்ளார்.

கடந்த சில தினங்களாக, பயணிகள் போக்குவரத்து பஸ் கள் அதிகளவில் விபத்துக் குள் ளாகி வரும் காரணத்தினால் பயணிகள் போக்குவரத்து பஸ்களில் சிறப்பு சோதனை தொடங்கப்பட்டது.

போதைப்பொருள் பயன் படுத்தி விட்டு பஸ்களை செலுத்தும் சாரதிகள் தொடர்பி லும் பொலிஸாருக்கு தகவல் கிடைக்கபட்டுள்ளது.

பஸ் சாரதிகள் போதையில் வாகனம் செலுத்துவது தொடர் பில் தகவல் கிடைத்தால் பொலி ஸாருக்கு அறிவிக்குமாறு பொதுமக்களிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (அ)

# நாட்டில் ஆட்சியைக் கொண்டு செல்லும் மத்தியவங்கி ஆளுநர், திறைசேரி செயலர்

## முஜிபுர் ரஹ்மான் சுட்டிக்காட்டு

கொழும்பு, டிசெ. 24

மத்திய வங்கி ஆளுநரும், திறைசேரி செயலாளரும் ரணில் விக்கிரமசிங்க அரசாங்கத்தின் பாதையிலேயே இவர்களை அழைத்துச் செல்கின்றனர். ஜனாதிபதி அநுர நடுவில் அமர்ந்திருப்பதும் இவர்கள் இருவரும் ஆட்சியைக் கொண்டு செல்வதும் மிகத் தெளிவாகத் தெரிவதாக ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப் பினர் முஜிபுர் ரஹ்மான் தெரி வித்தார்.

கொழும்பில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண் டதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும் போதே அவர் இதனைக் கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கை யில்-ஆட்சிக்கு வந்தவுடன் நாணய நிதிய ஒப்பந்தத்தி லிருந்து விலகுவதாகக் கூறிய வர்களுக்கு இன்று ரணில் விக்கிரமசிங்க அரசாங்கத்தில் எட்டப்பட்ட இணக்கப்பாட் டில் ஒரு எழுத்தைக் கூட மாற்ற முடியாத நிலைமை ஏற்பட்டுள் ளது. மத்திய வங்கி ஆளுநரும், திறைசேரி செயலாளருமே ரணில் விக்கிரமசிங்க அரசாங் கத்தின் பாதையிலேயே இவர் களை அழைத்துச் செல்கின் றனர். ஜனாதிபதி அநுர நடுவில் அமர்ந்திருப்பதும் இவர்கள் இருவரும் ஆட்சியைக் கொண்டு செல்வதும் மிகத் தெளிவாகத் தெரிகிறது.

இந்தியாவின் அபிவிருத்தித் திட்டங்களுக்கு கடுமையான எதிர்ப்பை வெளியிட்ட இவர் கள், இந்திய விஜயத்தின்போது வெளியிடப்பட்ட கூட்டு அறி விப்பில் சம்பூர் வேலைத்திட் டத்துக்கு முழுமையாக இணங்கியுள்ளனர். மக்கள் ஆணையைப் பெற்றமைக்கு அடிப்படையாக அமைந்த காரணிகளுக்கு முரணாகவே இவர்கள் தற்போது செயற் படுகின்றனர். 76 ஆண்டுகள் இலங்கை சாபத்தை அனுப வித்ததாக இவர்கள் கூறினால், சந்திரிகா அரசாங்கத்தில் அமைச்சுப்பதவிகளை வகித்த வர்கள் அடிப்படையில் ஜே.வி. பி.யினதும் அதன் பங்குதா ரர்களே.

ஜனாதிபதி கதிரையில் அமர்ந்த பின்னர் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க மறந்து போன வாக்குறுதிகளை நினைவுபடுத்துவதற்கான வேலைத்திட்டங்களையே தற்போது நாம் முன்னெடுத் திருக்கின்றோம். அதனை விடுத்து அரசாங்கத்தை கவிழ்த்து ஆட்சியைக் கைப் பற்றுவது எமது நோக்கமல்ல. 2010ஆம் ஆண்டுக்கு முன்னர் ஜனாதிபதி நிதியத்திடமிருந்து நிதியுதவி பெற்றவர்களின் பெயர் பட்டியல் வெளியிடப் பட்டால் அது மக்களுக்கு பாரிய ஆச்சரியத்தைக் கொடுக் கும். தகவல் அறியும் உரிமை சட்டத்தின் கீழ் நாமும் இது குறித்த தகவல்களைக் கோரியிருக்கின்றோம்-என்றார்.

# ஜனநாயக மக்கள் முன்னணியின் உப தலைவராக பாரத் அருள்சாமி

## பிரசார செயலாளராக லோஷன் நியமனம்

கொழும்பு, டிசெ. 24

ஜனநாயக மக்கள் முன்ன ணியின் சர்வதேச தொடர்பா டல்கள் விவகார உப தலைவ ராக பாரத் அருள்சாமி, கட்சி யின் பிரசார செயலாளராக ஏ.ஆர்.வி.லோஷன் ஆகியோர் தெரிவாகியுள்ளனர்.

ஜனநாயக மக்கள் முன்னணி யின் அரசியல் குழு நேற்று முன் தினம் கொழும்பில் கட்சியின் தலைவர் பாராளுமன்ற உறுப்பி னர் மனோ கணேசன் தலைமை யில் கூடியது.

தமிழ் முற்போக்கு கூட்ட ணியின் பிரதான பங்காளி கட்சி யான ஜனநாயக மக்கள் முன் னணி ஜனாதிபதி தேர்தல் மற் றும் பொதுத் தேர்தல்களில் ஐக்கிய மக்கள் கூட்டணியில் தேர்தல்களுக்கு முகம் கொடுத் திருந்தது.

இக்கூட்டத்தில் கட்சியின் பொது செயலாளர் முருகேசு பரணிதரன், தவிசாளர் ஜெய பாலன், நிதி செயலாளர் கணேசன், இணை உப தலைவர் சசிகுமார், நிர்வாக செயலாளர் பிரியாணி உள்பட கொழும்பு, கம்பஹா, இரத்தினபுரி, கேகாலை, கண்டி, களுத்துறை, மாத்தளை, ஆகிய மாவட்ட அமைப்பாளர்கள், பிரதிநிதிகள் அடங்கிய அரசியல் குழு உறுப் பினர்கள் கலந்து கொண்டனர்.

நடைபெற்ற தேர்தல்கள், நாடு முழுவதும் கட்சியின் வியூகங்கள் தொடர்பாகவும் இங்கு கலந்துரையாடப் பட்டது.

பல சவால்களுக்கு மத்தி யிலும் கட்சி சார்பாக போட்டி யிட்ட வேட்பாளர்கள் கணி சமான வாக்குகளை பெற்றுக் கொண்டமை தொடர்பாகவும், எதிர்வரும் உள்ளூராட்சி சபை தேர்தல்களில் போட்டியிட வுள்ள திட்டங்கள் பற்றியும் தீர்க்கமாக கலந்துரையாடப் பட்டது.

உள்ளூராட்சி தேர்தல்கள் தொடர்பில் பல சாத்தியங்கள் ஆராயப்பட்டன.

தனித்து ஜனநாயக மக்கள் முன்னணியின் ஏணி சின்னத் தில், தமிழ் முற்போக்கு கூட்ட ணியாக மின்சூழ் சின்னத்தில் அல்லது ஐக்கிய மக்கள் சக்தி யின் தொலைபேசி சின்னத்தில் களம் இறங்குவது என்ற பல சாத்திய, சாதக பாதகங்கள் ஆராயப்பட்டன.

கட்சியின் சர்வதேச தொடர்பாடல்கள் விவகார உப தலைவராக பாரத் அருள்சாமி, கட்சியின் பிரசார செயலா ளராக ஏ.ஆர்.வி.லோஷன், உதவிச் செயலாளராக பாலசுரேஷ் குமார் ஆகியோர், தலைவர் மனோ கணேசனால் பிரேரிக்கப்பட்டு அரசியல் குழுவினால் ஏகமனதாக ஆமோ திக்கப்பட்டு தேர்ந்தெடுக்கப் பட்டனர். (அ)

# இறக்குமதி செய்யப்படும் அரிசி 10 நாட்களுக்கு மட்டுமே போதும்

கொழும்பு, டிசெ. 24

இந்தியாவில் இருந்து இறக் குமதி செய்யப்படும் அரிசித் தொகை 10 நாட்களுக்கு மாத் திரமே போதுமாக உள்ளதாக அரிசி இறக்குமதியாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

அதன்படி, மேலும் அரிசி இறக்குமதி செய்யப்படவில்லை எனவே அரிசித் தட்டுப்பாடு அதிகரிக்கும் என அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

நாட்டில் நிலவும் அரிசி தட்டுப்பாடு காரணமாக இந்தி யாவிலிருந்து 70,000 மெற்றிக் தொன் அரிசியை இறக்குமதி செய்ய அரசாங்கம் நடவடிக்கை எடுத்திருந்தது.

இந்நிலையில், அரிசியை இறக்குமதி செய்வதற்கான கால அவகாசத்தை எதிர்வரும் ஜனவரி மாதம் 10ஆம் திகதி வரை அரசாங்கம் நீடித்துள் ளது.

மேலும், இறக்குமதி செய் யப்படும் என எதிர்பார்க்கப் படும் அரிசி கையிருப்பு சுமார் ஒரு இலட்சத்து பத்தாயிரம் மெற்றிக் தொன் ஆகும். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எட்கா ஒப்பந்தம் தொடர்பில் அரசுக்குள் இரட்டை நிலை!

## பொதுஜன பெரமுன குற்றச்சாட்டு

கொழும்பு, டிசெ. 24

**இந்தியாவுடனான எட்கா ஒப்பந்தத்தில் அரசாங்கத்திற்குள் இரட்டை நிலைப்பாடு காணப்படுகிறது. ஒப்பந்தம் குறித்து பேச்சுவார்த்தையில் ஈடுபடுவதாக அரசாங்கம் குறிப்பிடுகின்ற நிலையில், ஒப்பந்தத்தை கைவிட தீர்மானித்துள்ளதாக பிறிதொரு தரப்பினர் குறிப்பிடுகின்றமை கவனிக்கத்தக்கது என பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர் டி.வி. சானக தெரிவித்தார்.**

அம்பாந்தோட்டை பகுதியில் நேற்று முன் தினம் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற பொதுஜன பெரமுனவின் தொகுதி அமைப்பாளர்களுடனான சந்திப்பின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்- ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க தேர்தல் மேடைகளில் குறிப்பிட்டதற்கு முரணாகவே தற்போது செயற்படுகிறார். ஆட்சிக்கு வந்தவுடன் இந்தியாவின் அதானி குழுமத்துடனான ஒப்பந்தங்களை இரத்துச் செய்வதாக குறிப்பிட்டார். ஆனால் தற்போது அதானி குழுமம் விவகாரம் மறக்கப்பட்டுள்ளது.

இந்தியாவுடனான எட்கா உட்பட சர்ச்சைக்குரிய ஒப்பந்தங்களை இரத்துச் செய்வதாக ஜனாதிபதி குறிப்பிட்டார். ஆனால் இந்திய விஜயத்தின் பின்னர் எட்கா ஒப்பந்தத்தை கைச்சாத்திடுவது பற்றி பேசுவதாக அரசாங்கம் குறிப்பிடுகிறது. எட்கா ஒப்பந்தத்தை கைச்சாத்திட்டால் இலங்கைக்கு ஏற்படும் பாதிப்பு குறித்து 2008 ஆம் ஆண்டு முதல் குறிப்பிடப்பட்டு, கடும் எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டுள்ளது. மக்கள் விடுதலை முன்னணியும் கடந்த காலங்களில் எட்கா ஒப்பந்தத்துக்கு எதிராக போர் கொடி உயர்த்தியது.

இந்தியாவுடனான எட்கா ஒப்பந்தம் தொடர்பில் அரசாங்கத்துக்குள் இரட்டை நிலைப்பாடு காணப்படுகிறது. ஒப்பந்தம் குறித்து பேச்சுவார்த்தையில் ஈடுபடுவதாக அரசாங்கம் குறிப்பிடுகின்ற நிலையில், ஒப்பந்தத்தை கைவிட தீர்மானித்துள்ளதாக பிறிதொரு தரப்பினர் குறிப்பிடுகின்றமை கவனிக்கத்தக்கது. ஆகவே அரசாங்கம் இவ்விடயத்தில் வெளிப்படைத்தன்மையுடன் செயற்பட வேண்டும்.

நாட்டுக்கு எதிரான ஒப்பந்தங்களில் கைச்சாத்திடுவதற்கு ஒருபோதும் இடமளிக்க போவதில்லை.

நாட்டு மக்களில் பெரும்பாலானவர்கள் தேசியத்தை முன்னிலைப் படுத்தி செயற்படுகிறார்கள் என்பதை அரசாங்கம் நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும்-என்றார். (அ)

# பாடசாலை உபகரணங்களின் விலையை குறைக்க கோரிக்கை

கொழும்பு, டிசெ. 24

புதிய பாடசாலை தவணை ஆரம்பிக்கவுள்ள நிலையில், பாடசாலை உபகரணங்கள் மற்றும் எழுதுபொருட்களை வாங்குவதில் பெற்றோர்கள் மும்முரமாக உள்ளனர்.

பாடசாலை உபகரணங்களின் விலை இன்னும் அதிகமாக உள்ளதாக பெற்றோர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

சில பாடசாலை உபகரணங்களின் விலைகள் ஏறக்குறைய இரு மடங்காக உயர்ந்துள்ளதாகவும் அவர்கள் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை, பாடசாலை உபகரணங்களுக்கு விதிக்கப்பட்டுள்ள வரியை அரசாங்கம் நீக்கினால் இந்த நிலைமைக்கு தீர்வு கிடைக்கும் என இலங்கை ஆசிரியர் சங்கம் சுட்டிக்காட்டியுள்ளது.

பாடசாலை உபகரணங்கள் மற்றும் எழுதுபொருட்கள் மீது விதிக்கப்பட்டுள்ள வரியை உடனடியாக நீக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என அந்த சங்கம் வலியுறுத்தியுள்ளது. (அ)

# கேக் விற்பனையில் வீழ்ச்சி!

கொழும்பு, டிசெ. 24

பண்டிகைக் காலங்களில் கேக் கொள்வனவு செய்யும் போது மக்கள் விலை தொடர்பில் அவதானமாக இருக்க வேண்டுமென அகில இலங்கை பேக்கரி உற்பத்தியாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

கடந்த வருடத்தை விட இவ்வருடம் கேக் விலையில் சிறிதளவு குறைவு காணப்படுவதாக அதன் தலைவர் என். கே.ஜயவர்தன தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்பொதுவாக பட்டர் கேக் ரூ.900 ரூ.1200 இடையே விற்கப்படுகின்றது.

தற்போதைய அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தை நடத்த சந்தர்ப்பம் கிடைத்திருந்தால் பேக்கரி பொருட்களின் விலைகளை குறைத்திருக்கலாம். ஆனால் அவ்வாறான சந்தர்ப்பம் எங்களுக்கு வழங்கப்பட வில்லை. கோதுமை மா, மாஜரின் விலைகளை அரசு தலையிட்டிருந்தால் குறைத்திருக்கலாம். மக்கள் அவதானமாக இருங்கள். குறைந்த விலையில் தெரிவு செய்வது மக்கள் கைகளில் தான் இருக்கின்றது. சிலர் விலைகளை அதிகரித்தும் சொல்லலாம்.. மக்கள் சிந்தித்து செயல்படுங்கள்-என்றார். (அ)

பிரிக்ஸ் உறுப்புரிமை

# நாட்டை ஜனாதிபதி இழிவுபடுத்தியுள்ளார்

## டியூ குணசேகர குற்றச்சாட்டு

கொழும்பு, டிசெ. 24

இலங்கைக்கு பிரிக்ஸ் உறுப்புரிமை பெற்றுக்கொள்ள தலையிடுமாறு இந்திய பிரதமரை கேட்டுக்கொண்டுள்ளதன் மூலம் ஜனாதிபதி இலங்கையை இழிவுபடுத்தியுள்ளார் என இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியின் தவிசாளரும் முன்னாள் அமைச்சருமான டியூ குணசேகர தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்- இந்தியாவுக்கு உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டிருந்த ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க, அங்கு இந்திய பிரதமர் நரேந்திர மோடியுடன் கூட்டு பிரகடனம் ஒன்றை வெளியிட்டிருந்தார். அதில் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க, பிரிக்ஸ் நாடுகளின் உறுப்புரிமை பெற்றுக்கொள்ள தலையிடுமாறு இந்திய பிரதமரிடம் கோரிக்கை முன்வைத்திருந்தார். ஜனாதிபதி இதனை அவரிடம் தனிப்பட்ட முறையில் கேட்டிருந்தால் எந்த பிரச்னையும் இல்லை.

ஆனால் கூட்டு பிரகடனம் ஒன்றின்போது இவ்வாறான கோரிக்கை ஒன்றை வெளியிடும்போது இழிவுபடுத்தப்படுவது, ஜனாதிபதி அல்ல, நாட்டு மக்கள். ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க செப்ரெம்பர் 23ஆம் திகதி இந்த நாட்டின் ஜனாதிபதியாக சத்தியப்பிரமாணம் செய்தார். பிரிக்ஸ் அரச தலைவர்களின் மாநாடு ரஷ்யாவில் ஜனாதிபதி புடின் தலைமையில் ஒக்ரோபர் 22,23,24ஆம் திகதிகளில் இடம்பெற்றது. இந்த மாநாட்டில் கலந்துகொள்ளுமாறு ரஷ்ய ஜனாதிபதி புடின் எழுத்து மூலம் இலங்கை அரசாங்கத்துக்கு அழைப்பு விடுத்திருந்தார்.

ஜனாதிபதிக்கு வேலைப்பளு என்றால் பிரதமரை அல்லது வெளிவிவகார அமைச்சரை அந்த மாநாட்டில் கலந்து கொள்ளச் செய்திருக்கலாம். -என்றார். (அ)

# பண்டிகை காலங்களில் வெளியிடங்களில் உணவு உண்பதால் பல நோய்கள் ஏற்படும்

## வைத்திய நிபுணர் தீபால் பெரேரா

கொழும்பு, டிசெ. 24

பாடசாலை விடுமுறை மற்றும் பண்டிகைக் காலத்தை முன்னிட்டு வெளியிடங்களுக்கு சுற்றுலாவுக்காக செல்லும் சிறுவர்கள் சுகாதார மற்ற உணவகங்களில் உணவு மற்றும் சிற்றுண்டிகளை கொள்வனவு செய்து உண்பதால் வயிற்றுப் போக்கு மற்றும் தைபோயிட் காய்ச்சல் ஏற்பட கூடுமென கொழும்பு சிறுவர் வைத்தியசாலையின் சிறுவர் நோய் தொடர்பான விசேட வைத்திய நிபுணர் தீபால் பெரேரா தெரிவித்துள்ளார்.

பண்டிகைக் காலங்களில் ஏற்படக்கூடிய நோய் நிலைகளில் இருந்து பாதுகாப்பு பெறுவது தொடர்பில் பதிலளிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-தற்போது பாடசாலை விடுமுறை அளிக்கப்பட்டுள்ளதுடன் பண்டிகைக் காலத்தை முன்னிட்டு சிறுவர்கள் வெளியிடங்களுக்கு சுற்றுலாவுக்காக செல்வதும் அதிகரித்துள்ளது. அவ்வாறு சுற்றுலாக்களுக்கு செல்வோர் கண்களில் தென்படும் உணவகங்களிலும் கடைகளிலும் உணவு மற்றும் சிற்றுண்டிகளைக் கொள்வனவு செய்து உண்பதை வாடிக்கையாகக் கொண்டுள்ளனர்.

இவ்வாறு வெளியிடங்களில் உணவு பொருட்கள் மற்றும் பானங்களை கொள்வனவு செய்யும்போது அவதானத்துடன் செயற்பட வேண்டும். அசுத்தமான உணவுப் பொருட்களை உட்கொள்வதால் வயிற்றுப்போக்கு, தைபோயிட் காய்ச்சல் போன்ற நோய் நிலைமைகளுக்கு ஆளாக நேரிடலாம். ஆகையால் சிறுவர்களுக்கு ஈக்களிடமிருந்து பாதிக்கப்படாத சுகாதாரமான உணவு மற்றும் பானங்களை பெற்றோர் வழங்க வேண்டும்.

உணவகங்கள் மற்றும் உணவுப் பண்டங்களை தயாரித்து விற்பனை செய்பவர்களுக்கும் பொதுமக்களின் ஆரோக்கியத்தை கருத்திற் கொண்டு சுகாதாரமான உணவுப் பொருட்களை தயாரித்து விற்பனை செய்ய வேண்டும். சிறுவர்களுக்கு வயிற்றுப் போக்கு ஏதும் ஏற்படும் பட்சத்தில் எலுமிச்சை பழ பானம், அரிசி கஞ்சி, இளநீர், யோகட், வாழைப்பழம் ஆகிய வற்றை வழங்குங்கள். எண்ணை சார்ந்த உணவுப் பொருட்களை தவிர்க்கலாம்.

இதன்போது உடலில் ஏற்படக்கூடிய நீரிழப்பை கட்டுப்படுத்துவது அவசியமாகும். தொடர்ச்சியாக வயிற்றுப் போக்கு காணப்படும் பட்சத்தில் தகுதி வாய்ந்த வைத்தியரை நாடுவது நல்லது. அத்தோடு இந்நாட்களில் வாகன விபத்துக்களும் அதிகரித்துள்ளன. ஆகையால் வெளியிடங்களுக்கு பயணிக்கும் போது அவதானத்துடன் செயற்படுங்கள். ஆறு, கடல் உள்ளிட்ட நீர்நிலைகளில் நீராட, விளையாட விரும்புபவர்கள் பாதுகாப்பான இடங்களில் உரிய பாதுகாப்பு முறைகளை பின்பற்றி அவ்வாறான செயற்பாடுகளில் ஈடுபடலாம்-என்றார். (அ)

# ஒவ்வொரு மாகாணத்துக்கும் சிறப்பு குற்ற புலனாய்வு பிரிவு

கொழும்பு, டிசெ. 24

மாகாணங்களில் குற்றங்களைக் குறைக்க மாகாண அளவில் ஒரு புதிய சிறப்பு குற்றப் புலனாய்வுப் பிரிவு அமைக்கப்பட உள்ளது.

ஒவ்வொரு மாகாணத்திற்கும் ஒன்று என்ற வகையில் ஒன்பது பொலிஸ் பிரிவுகளும் கொழும்பு குற்றப் பிரிவின் மாதிரியாக வடிவமைக்கப்பட்டு, பாரிய குற்றங்களை விசாரிப்பதற்கும் மாகாண மட்டத்தில் சிறப்பு விசாரணைகளை நடத்துவதற்கும் பணிக்கப்படும் என்று பொது பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால தெரிவித்துள்ளார்.

இந்த புதிய பொலிஸ் பிரிவு ஜனவரி முதல் செயல்படும் என்றார். (அ)

# இறக்குமதி வரியை குறைக்குமாறு அரிசி வர்த்தகர்கள் கோரிக்கை

கொழும்பு, டிசெ. 24

அரிசி இறக்குமதிக்கு சுங்க வரி விதித்துள்ள ஒரு கிலோவுக்கு 65 ரூபா வரியை குறைக்குமாறு பல பிரதேசங்களில் உள்ள வர்த்தகர்கள் அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இறக்குமதி செய்யப்படும் அரிசிக்கான வரி குறைக்கப்பட்டால் அரிசி கட்டுப்பாட்டு விலையினை தொடர்ந்து பேண முடியுமென வர்த்தகர் [illegible] கின்றன.

சுமார் 2 மாதங்களாக நிலவி வரும் அரிசி நெருக்கடிக்கு தீர்வாக கடந்த பருவத்தில் அதிகபட்ச மொத்த மற்றும் சில்லறை விலைகளை விதிக்கவும், அரிசி ஆலைகளை நுகர்வோர் அதிகாரசபையினர் சோதனை செய்யவும், வெளிநாடுகளில் இருந்து அரிசி இறக்குமதி செய்யவும் அரசு பல வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டது.

அரிசி இறக்குமதிக்காக அனுமதி வழங்கப்பட்டுள்ள நிலையில், டிசெம்பர் 20 ஆம் திகதி வரை 67,000 மெற்றிக் தொன் அரிசி இறக்குமதி செய்யப்பட்டுள்ளதாக இலங்கை சுங்கம் தெரிவித்துள்ளது.

இதில் 38,500 மெற்றிக் தொன் நாட்டரிசி காணப்படுவதோடு, மீதமுள்ள 28,500 மெற்றிக் தொன் பச்சை அரிசியாகும். இந்த அரிசி இறக்குமதிக்காக ஒரு கிலோகிராம் ஒன்றுக்கு 65 ரூபா வீதம் 4.3 பில்லியன் ரூபாவை இறக்குமதி வரியாக இலங்கை சுங்கம் அறவீடு செய்துள்ளது. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருகோணமலையில் தொடரும் காட்டு யானைகளின் அட்டகாசம்

## வீடு பலத்த சேதம், மயிரிழையில் உயிர் தப்பிய குடும்பம்

திருகோணமலை, டிசெ. 24

**திருகோணமலை, கிண்ணியாவில் மக்களின் குடியிருப்புகளுக்குள் புகுந்து காட்டு யானைகள் அட்டகாசத்தில் ஈடுபட்டு பெரும் அழிவுகளை ஏற்படுத்தி வருவதாக அப்பகுதி மக்கள் கவலை வெளியிட்டுள்ளனர்.**



கிண்ணியா பிரதேச செயலக பகுதிக்குட்பட்ட ஆலங்கேணி கிராமத்தில் உள்ள மக்களின் குடியிருப்பு பகுதிக்குள் நேற்று முன்தினம் இரவு 11 மணியளவில் நுழைந்த காட்டு யானைகள் மேற்கொண்ட தாக்குதலில் வீடொன்று பலத்த சேதமடைந்துள்ளது.

உறங்கிக் கொண்டிருக்கும் போது குறித்த யானை தாக்குதல் இடம்பெற்றதாக பாதிக்கப்பட்ட பெண் ஒருவர் கூறினார்.

இதனால், வீடு மற்றும் உடைமைகள் சேதமாக்கப்பட்டு தான் மயிரிழையில் உயிர் தப்பியதாகவும் தெரிவித்தார்.

குறித்த பகுதியில் அடிக்கடி யானைகளால் தொல்லை ஏற்படுகிறது. இதனால், அப் பிரதேச மக்கள் நிம்மதியாக உறங்க முடியாது தவிர்க்கின்றனர்.

இந்த நிலையில், யானைகளை தடுக்க வேலி அமைத்து தம்மை பாதுகாக்குமாறு உரிய அதிகாரிகளுக்கு மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.(எ)

# சுகாதார சேவைகளை மேம்படுத்த உபகரணங்கள் வழங்கி வைப்பு




கல்முனை, டிசெ.24

அட்டாளைச்சேனை பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுக்குட்பட்ட மக்களின் சுகாதார சேவைகளை மேம்படுத்தும் நோக்கில் காரியாலயத்துக்கு தேவையான மிகப் பெறுமதியான உபகரணங்கள் மற்றும் தளபாடங்கள் வழங்கி வைக்கப்பட்டன.

அட்டாளைச்சேனை சுகாதார வைத்திய அதிகாரி காரியாலயத்துக்கு மிக நீண்டகாலத் தேவையாக காணப்பட்டு வந்த குறைபாடுகளை நிவர்த்தி செய்து தருமாறு, அட்டாளைச்சேனை சுகாதார வைத்திய அதிகாரி ஏ. எம். எம். இஸ்ஸதீன், கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் சகிலா இஸ்ஸஉீனிடம் விடுத்த வேண்டுகோளுக்கமைவாக இந்த உபகரணங்களும், தளபாடங்களும் வழங்கி வைக்கப்பட்டன. (எ)

# வாடகை வாகனத்தில் ஐஸ் போதை கடத்தல்

## இருவருக்கு விளக்கமறியல்

கல்முனை,டிசெ. 24

ஐஸ் போதைப்பொருட்களை வாடகை வாகனம் மூலம் கடத்தி விற்பனை செய்து வந்த இரு சந்தேக நபர்களை எதிர்வரும் டிசெம்பர் மாதம் 31 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு கல்முனை நீதிமன்ற பதில் நீதிவான் உத்தரவிட்டார்.

அம்பாறை மாவட்டம் பெரிய நீலாவணை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மருதமுனை புறநகர் பகுதியில் வைத்து சந்தேகத்துக்கு இடமாக சென்ற வான் ஒன்றை பின்தொடர்ந்த பொலிஸார் குறித்த வாகனத்தை நிறுத்தி சோதனை மேற்கொண்டனர்.

இதன்போது, குறித்த வாகனத்தில் ஒரு தொகுதி ஐஸ் போதைப்பொருள் மீட்கப்பட்டதுடன் அதில் பயணம் செய்த 24 வயது இளைஞர்கள் இருவர் கைது செய்யப்பட்டனர்.

அத்துடன் வாடகை அடிப்படையில் பெற்றுக்கொள்ளப்பட்ட குறித்த வான் பறிமுதல் செய்யப்பட்டதுடன் சந்தேக நபர்களான மருதமுனை பகுதியைச் சேர்ந்த இருவரும் கல்முனை நீதிமன்ற பதில் நீதிவான் முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்டனர்.

இருவரையும் டிசெம்பர் 31 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டதுடன் மேலதிக விசாரணைகளை பெரிய நீலாவணை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.(எ)

# அரச உத்தியோகத்தர்கள் கவனவீர்ப்பு போராட்டம்!

## கிராம உத்தியோகத்தர் மீதான தாக்குதலுக்கு எதிராக கோஷம்

வாழைச்சேனை, டிசெ.24

நாசிவன் தீவு கிராம உத்தியோகத்தரை தாக்கியவர்கள் இதுவரை கைது செய்யப்படாமல் உள்ளதை கண்டித்தும், அரச உத்தியோகத்தர்கள் தொடர்ந்து தாக்குதலுக்குள்ளாவதை கண்டித்தும், நீதி வேண்டியும் நேற்றுக்காலை மட்டக்களப்பு, வாழைச்சேனை - கோறளைப்பற்று பிரதேச செயலகத்துக்கு முன்பாக கவனவீர்ப்புப் போராட்டம் ஒன்று மேற்கொள்ளப்பட்டது.

கோறளைப்பற்று பிரதேச நலன்புரிச் சங்கத்தின் சார்பில் இந்தக் கண்டனப் போராட்டம் மேற்கொள்ளப்பட்டது.

பிரதேச செயலகத்துக்கு முன்னால் உள்ள வாழைச்சேனை பிரதான வீதியில் ஒன்றுகூடிய பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் கைகளில் பதாகைகளை ஏந்தியவாறு கோஷங்களை எழுப்பி போராட்டத்தில் ஈடுபட்டனர்.

"வேண்டும் வேண்டும் நீதி வேண்டும்," "தாக்காதே தாக்காதே அரச உத்தியோகத்தரை தாக்காதே," "கைது செய், கைது செய் குற்றவாளிகளை கைது செய்" என வாசகங்கள் எழுதிய




பதாகைகளை ஏந்தியவாறு கோஷங்களை எழுப்பினர்.

இதேவேளை, போராட்டம் இடம்பெற்ற இடத்துக்கு வருகை தந்த வாழைச்சேனை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி மற்றும் பிரதேச செயலாளர் ஆகியோரிடம் தங்களது கோரிக்கைகள் அடங்கிய மகஜரை போராட்டத்தில் ஈடுபட்டோர் கையளித்தனர்.

மகஜரை பெற்றுக்கொண்ட பொலிஸ் அதிகாரி, குற்றவாளிகளை கைது செய்வதில் அயராது முயற்சி எடுத்துக் கொண்டிருப்பதாகவும் அவர்களை கைது செய்யும் நடவடிக்கையில் இரவு பகலாக பொலிஸ் குழுவினர் ஈடுபட்டு வருவதாகவும் அவர்கள் சரணடையாமல் தலைமறைவாகியுள்ளதாகவும் தெரிவித்தார்.

விரைவில் அவர்களை கைது செய்வேன் என்றும் அவர் கூறினார்.

கடந்த ஆம் திகதி வாழைச்சேனை பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட நாசிவன் தீவு கிராமத்தில் கடமையாற்றும் கிராம உத்தியோகத்தர் வெளிக்கள கடமை நிமித்தம் அலுவலகம் திரும்பும் வழியில் மதுபோதையில் வந்த குழுவொன்றால் தாக்கப்பட்டு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்தார். (எ)

# வித்தகர் விருது பெற்றார் அல்ஹாஜ் ஆதம்பாவா

திருகோணமலை,டிசெ.24

கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தால் நடத்தப்பட்ட இலக்கிய விழாவில் அல்ஹாஜ் யூ. எல். ஆதம்பாவா வித்தகர் விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டார்.

இவர் சிறுவயது முதல் தற்போது வரை நாட்டார் பாடல்களைப் பாடியும், எழுதியும் வருகின்ற அதேவேளை, அவற்றை நூல் வடிவிலும் தொகுத்து "கிராமத்து மணவாசம்", "தென்கிழக்கின் பாரம்பரியம்" என்ற பெயரில் வெளியிட்டிருக்கின்றார்.



அத்தோடு பிரதேச, மாவட்ட, மாகாண மட்ட போட்டிகளிலும் பங்குபற்றி பல விருதுகளையும், சான்றிதழ்களையும் பெற்றுள்ளார். (எ)

# சொகுசு பஸ் சேவை ஆரம்பம்

கல்முனை, டிசெ.24

இலங்கை போக்குவரத்து சபையின் கல்முனை சாலையால் நேற்று திங்கட்கிழமை முதல் முற்றிலும் குளிரூட்டப்பட்ட பஸ் சேவை ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்று சாலை முகாமையாளர் வி. ஜௌபர் தெரிவித்தார்.

இந்த பஸ் சேவையானது இரவு 10. 30 மணிக்கு கல்முனை பிரதான பஸ்தரிப்பு நிலையத்தில் இருந்து கட்டுநாயக்க விமான நிலயம் சென்று தொடர்ந்து கொழும்பு பிரதான பஸ்தரிப்புநிலையம் சென்றடையும் என அவர் கூறினார். (எ)

# 8,000 லீற்றர் கசிப்புடன் ஒருவர் கைது



சம்மாந்துறை, டிசெ.24

கசிப்பு உற்பத்தி நிலையம் ஒன்றை நீண்ட காலமாக நடத்தி வந்த நபரை சம்மாந்துறை விசேட அதிரடிப் படையினர் கைது செய்தனர். அவரிடம் இருந்து சுமார் 8,000 லீற்றர் கசிப்பு பறிமுதல் செய்யப்பட்டது.

அம்பாறை மாவட்டம் சவளைக்கடை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட வீரச்சோலை அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலைக்கு பின்னால் சூட்சுமமான முறையில் நடத்தி வந்த கசிப்பு உற்பத்தி நிலையம், இதன்போது, கசிப்பு உற்பத்தி நிலையத்தை நடத்தி வந்த 50 வயதுடைய நபரை கைது செய்ததுடன் கைது செய்யப்பட்ட சந்தேக நபரிடம் இருந்து 8,000 லீற்றர் கசிப்பு 17,000 லீற்றர் கோடா, 13,000 லீற்றர் வடி என்பன பறிமுதல் செய்யப்பட்டன. (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உணவு வாங்க முண்டியடித்து நெரிசலில் சிக்கி 32 பேர் பலி!

## நைஜீரியாவில் தொடரும் பெரும் சோகம்

அபுஜா, டிசெ. 24

**கிறிஸ்மஸ் பண்டிகையையொட்டி இலவசமாக உணவு வழங்க ஏற்பாடு செய்யப்பட்டிருந்தபோது திடீரென ஏற்பட்ட கூட்ட நெரிசலில் சிக்கி 32 பேர் உயிரிழந்தனர்.**

ஆபிரிக்க நாடான நைஜீரியாவில் கடும் பொருளாதார நெருக்கடி நிலவுகிறது. இதனால், இலட்சக்கணக்கானோர் அங்கு பட்டினியில் சிக்கி தவிக்கின்றனர். இந்த நிலையில் அனம்ப்ரா மாகாணம் ஒகிஜா நகரில் கிறிஸ்மஸ் பண்டிகையையொட்டி தன்னார்வ அமைப்பு சார்பில் பொதுமக்களுக்கு உணவுப் பொதிகள் வழங்கப்பட்டன. இதனை பெறுவதற்காக ஏராளமானோர் முண்டியடித்துச் சென்றனர். அப்போது, ஏற்பட்ட கூட்ட நெரிசலில் சிக்கி 32 பேர் பலியாகினர்.

இதேபோன்று, தலைநகர் அபுஜாவில் உள்ள ஒரு தேவாலயத்தில் கிறிஸ்மஸ் பண்டிகையை முன்னிட்டு பரிசுப் பொருட்கள் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இதனால், அங்கு நூற்றுக் கணக்கானோர் திரண்டனர்.

அப்போது, பரிசு களை பெற மக்கள் போட்டி போட்டு சென்றதால் கூட்ட நெரிசல் ஏற்பட்டது.

இதனால் சிறுவர்கள் உட்பட 35 பேர் உயிரிழந்தனர். (எ)

# 52 ஆளில்லா விமானங்களை சுட்டு வீழ்த்தியது உக்ரைன்!

கீவ், டிசெ.24

ரஷ்யாவின் 52 ஆளில்லா விமானங்களை உக்ரைன் சுட்டு வீழ்த்தியது.

இதேவேளை, ரஷ்ய தாக்குதலில் உக்ரைனில் உள்ள தனியார் சொத்துகள் மற்றும் பொதுமக்களின் உட்கட்டமைப்புகளுக்கு பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

ரஷ்யா மற்றும் உக்ரைன் இடையே போரானது 2 ஆண்டுகளை கடந்தும் நீடித்து வருகிறது.

இந்த நிலையில், ரஷ்ய படைகளின் தாக்குதலை உக்ரைனின் விமானப் படை நேற்று முறியடித்துள்ளது.

ஷாகித் ஆளில்லா விமானங்கள் உள்ளிட்ட ஆளில்லா விமானங்கள் மூலம் ரஷ்யா வான் வழித் தாக்குதலில் ஈடுபட்டுள்ளது. இதில், 103 ஆளில்லா விமானங்கள் தாக்குதலை நடத்தின.

அவற்றில், 52 ஆளில்லா விமானங்களை சுட்டு வீழ்த்தி விட்டோம் என்று உக்ரைன் இராணுவம் தெரிவித்துள்ளது.

எனினும், இந்தத் தாக்குதலில் உக்ரைனில் உள்ள தனியார் சொத்துகள் மற்றும் பொதுமக்களின் உட்கட்டமைப்புகளுக்கு பாதிப்பு ஏற்பட்டுள்ளது. (எ)

# இந்தியப் பிரதமர் மோடிக்கு குவைத்தின் உயரிய விருது

குவைத், டிசெ. 24

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடிக்கு, தி ஓர்டர் ஒப் முபாரக் அல் கபீர் என்ற குவைத் நாட்டின் உயரிய குடிமக்களுக்கான விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டுள்ளது.



பிரதமர் மோடி குவைத்துக்கு 2 நாள் அரசு முறை பயணம் மேற்கொண்டுள்ளார். அங்கு சென்ற மோடிக்கு சிறப்பான வரவேற்பு வழங்கப்பட்டது.

இந்த நிலையில், குவைத்தின் அமீர் ஷேக் மெஷல் அல்-அகமது அல்-ஜாபர் அல் சபா, பிரதமர் மோடிக்கு விருது வழங்கி கௌரவித்தார்.

தி ஓர்டர் ஒப் முபாரக் அல் கபீர் என்ற இந்த விருது நாடுகளின் தலைவர்கள், வெளிநாட்டு ஆட்சியாளர்கள் மற்றும் வெளிநாட்டு அரச குடும்பத்தினர் ஆகியோருக்கு வழங்கப்படுகிறது. (எ)

வத்திக்கான் தூதுவர் வந்திருக்கும் நிலையில்

# காஸாவில் அகதிகள் தங்கியிருந்த பாடசாலைமீது இஸ்ரேல் தாக்குதல்

## 5 குழந்தைகள் உட்பட 20 பேர் உயிரிழந்தனர்

காஸா, டிசெ.24

காஸா நகரில் இடம்பெயர்ந்த மக்கள் வசிக்கும் பாடசாலை மீது நேற்று அதிகாலை தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

காஸா பகுதி முழுவதும் நேற்று முன்தினம் இரவு முதல் நேற்று அதிகாலை வரை இஸ்ரேல் நடத்திய வான்வழித் தாக்குதல்களில் 5 குழந்தைகள் உட்பட 20 பேர் கொல்லப்பட்டதாக பலஸ்தீனிய மருத்துவ அதிகாரிகள் தெரிவித்தனர். காஸாவில் சிறப்பு பிரார்த்தனையில் பங்கேற்க வத்திக்கான் தூதுவர் வந்திருக்கும் சமயத்தில் இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

காஸாவில் மிகவும் குறைந்த அளவிலேயே கிறிஸ்தவ மக்கள் வசிக்கின்றனர். அங்கு கிறிஸ்மஸ் பண்டிகைக்கு முந்தைய சிறப்பு பிரார்த்தனையில் கலந்துகொள்வதற்காக வத்திக்கான் கத்தோலிக்க திருச்சபையின் தலைவரான கார்டினல் பியர்பட்டிஸ்டா பிஸ்ஸபல்லா வந்துள்ளார். இவர் காஸாவில் பிரார்த்தனை நிகழ்வில் பங்கேற்றார். அவர் காஸாவுக்குள் நுழைய இஸ்ரேல் அனுமதி வழங்கியது. எனினும், ஏற்கனவே காஸாவில் தாக்குதல் நடத்த திட்டமிட்டிருந்த பகுதிகளில் தாக்குதலையும் நடத்தியுள்ளது.

நேற்று முன்தினம் இரவு முதல் நேற்று அதிகாலை வரை இடம்பெற்ற தாக்குதல்களில் காஸா நகரில் இடம்பெயர்ந்த மக்கள் வசிக்கும் பாடசாலையும் ஒன்று. இந்தப் பாடசாலை மீது நடத்தப்பட்ட தாக்குதலில் 8 பேர் கொல்லப்பட்டனர். ஆனால், குறித்த பாடசாலையில் மறைந்திருந்த ஹமாஸ் போராளிகள் மீது துல்லியமான தாக்குதல் நடத்தியதாக இஸ்ரேல் இராணுவம் தெரிவித்ள்ளது. மற்ற இடங்களில் நடந்த தாக்குதல் தொடர்பாக இஸ்ரேல் தரப்பில் எதுவும் தெரிவிக்கப்படவில்லை. (எ)

# வீடு மீது விமானம் மோதிய விபத்தில் சிக்கி 10 பேர் பலி

பிரேசிலா, டிசெ.24

வீடு மீது விமானம் மோதி விபத்துக்குள்ளான சம்பவத்தில் 10 பேர் உயிரிழந்தனர்.

பிரேசில் நாட்டின் ரியோ கிராண்ட் டு சுல் மாகாணத்தில் இருந்து சிறிய ரக விமானம் ஒன்று சாலொ பாலோ மாகாணத்துக்குச் நேற்று சென்று கொண்டிருந்தது. அந்த விமானத்தில் 10 பேர் பயணித்தனர்.

இந்த நிலையில், சாலொ பாலோ மாகாணம் கிராமடோ நகர் அருகே பறந்துகொண்டிருந்தபோது திடீரென கட்டுப்பாட்டை இழந்த விமானம் வீடு மீது மோதியது.

இந்த கோர விபத்தில் சிக்கிய விமானம் தீப்பற்றி எரிந்தது. இந்த விபத்தில் விமானத்தில் பயணித்த 10 பேரும் உயிரிழந்தனர். அதேவேளை, வீட்டில் இருந்த 2 பேர் படுகாயமடைந்தனர்.

தகவலறிந்து விரைந்து வந்த மீட்புக்குழுவினர் படுகாயமடைந்தவர்களை மீட்டு அருகில் உள்ள மருத்துவமனையில் சிகிச்சைக்கு அனுமதித்தனர். (எ)

# சொந்த நாட்டு விமானம் மீதே அமெ. கடற்படை துப்பாக்கி சூடு

தம்பா, டிசெ.24

சொந்த நாட்டு விமானம் மீதே அமெரிக்கக் கடற்படை துப்பாக்கிச் சூடு நடத்தியுள்ளது.

ஏமனில் வர்த்தக கப்பல்களை தாக்கி வரும் ஹவுதி கிளர்ச்சியாளர்களை எதிர்கொள்ளும் வகையில், அந்த பகுதியில் அமெரிக்கக் கடற்படை ரோந்து பணியில் ஈடுபட்டு வருகிறது.

அமெரிக்காவின் புளோரிடா மாகாணத்தில் செங்கடலின் மேலே எவ் - ஏ-18 ரக போர் விமானம் ஒன்று நேற்றுப் பறந்து சென்றது. அமெரிக்காவை சேர்ந்த அந்த விமானத்தின் மீது திடீரென துப்பாக்கிச் சூடு நடத்தப்பட்டது. இந்தச் சம்பவத்தில் 2 விமானிகளில் ஒருவருக்கு காயங்கள் ஏற்பட்டுள்ளன. அவர்கள் இருவரும் விமானத்தில் இருந்து வெளியே குதித்து உயிர் தப்பினர்.

இதுபற்றி அமெரிக்க இராணுவத்தின் மத்திய படை வெளியிட்ட செய்தி குறிப்பில், அமெரிக்காவின் யு. எஸ். எஸ். ஹாரி எஸ். ட்ரூமேன் என்ற விமானம் தாங்கி கப்பலில் இருந்து இந்த விமானம் பறந்து சென்றுள்ளது. எனினும், இதுபற்றி அறியாமல், இந்த கப்பல் குழுவுடன் இணைந்த மற்றொரு கப்பலான யு. எஸ். எஸ். கெட்டிஸ்பர்க் கப்பலில் இருந்தவர்கள் துப்பாக்கிச் சூட்டை நடத்தினர்.

இஸ்ரேல் மற்றும் ஹமாஸ் இடையே போர் நடந்து வரும் சூழலில், ஈரான் ஆதரவு பெற்ற ஹவுதி கிளர்ச்சியாளர்கள் ஏமனில் வர்த்தக கப்பல்களை தாக்கி வருகின்றனர்.

இதனை எதிர்கொள்ளும் வகையில், அந்த பகுதியில் அமெரிக்கக் கடற்படை ரோந்து பணியில் ஈடுபட்டு வருகிறது.

இந்த நிலையில், அமெரிக்க போர் விமானம் பறந்தபோது அதனை தவறுதலாக, அமெரிக்க கப்பலில் இருந்தவர்கள் சுட்டுள்ளனர். எனினும், நட்பு ரீதியாக சுடப்பட்ட விவகாரம் என இதனை அமெரிக்க இராணுவ அதிகாரிகள் குறிப்பிட்டுள்ளனர். (எ)

# தமிழ்நாடு நோக்கி வரும் காற்றழுத்த தாழ்வு பகுதி

சென்னை, டிசெ.24

இந்தியாவின் தமிழ்நாட்டை நோக்கி மீண்டும் காற்றழுத்த தாழ்வு பகுதி வருகிறது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

மத்திய மேற்கு வங்கக்கடலில் நிலவிய காற்றழுத்த தாழ்வு மண்டலம் வறண்ட காற்றின் ஊடுருவலால் நன்கமைந்த காற்றழுத்த தாழ்வுப் பகுதியாக வலு இழந்து, மேற்கு - தென்மேற்கு திசையில் நகர்ந்து தமிழக கடற்கரை பகுதிகளை நோக்கி இன்று செவ்வாய்க்கிழமை வந்தடைகிறது.

இதன் காரணமாக சென்னை, திருவள்ளூர், செங்கல்பட்டு மாவட்டங்களில் 25, 26 ஆம் திகதிகளில் மிதமானது முதல் கனமழையும், விழுப்புரம், கடலூர் மற்றும் புதுச்சேரியில் மிதமான மழையும் பெய்ய வாய்ப்பு இருப்பதாக வானிலை ஆய்வாளர்கள் தெரிவித்தனர். (எ)

# "ஜேர்மன் ஜனாதிபதி பதவி விலக வேண்டும்"

டெக்ஸ்சாஸ், டிசெ.24

ஜேர்மன் ஜனாதிபதி உடனடியாக பதவி விலக வேண்டும் என்று உலகப் பணக்காரர்களில் ஒருவரான எலான் மஸ்க் தெரிவித்துள்ளார்.



எலான் மஸ்க் தனது எக்ஸ் வலைத்தளப் பதிவில் "ஜேர்மன் ஜனாதிபதி ஒலாப் ஷோல்ஸ் உடனடியாக பதவி விலக வேண்டும். அவர் திறமையற்ற முட்டாள். அவர் பதவி விலக வேண்டும்"என்று குறிப்பிட்டுள்ளார். எலான் மஸ்க்கின் இந்த பதிவு தற்போது இணையத்தில் பெரும் பேசு பொருளாகி வருகிறது.(எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒருநாள் தொடரை முழுமையாக கைப்பற்றியது பாகிஸ்தான் அணி

## சொந்த மண்ணில் சொதப்பியது தென்னாபிரிக்கா




ஜொகனஸ்பேர்க், டிசெ.24

மூன்றாவது போட்டியில் 36 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்ற பாகிஸ்தான் 3 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரை 3 - 0 என முழுமையாக கைப்பற்றியது.

பாகிஸ்தான் கிரிக்கெட் அணி தென்னாபிரிக்காவில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு மூன்று ரி - 20, 3 ஒருநாள் மற்றும் இரண்டு டெஸ்ட் போட்டிகளில் விளையாடி வருகிறது. இதில் முதலில் நடைபெற்ற ரி - 20 தொடரை 2-0 என தென்னாபிரிக்கா கைப்பற்றியது. இதையடுத்து நடைபெற்ற ஒருநாள் தொடரில் 2 போட்டிகள் முடிவில் இரு ஆட்டங்களிலும் பாகிஸ்தான் வெற்றி பெற்று தொடரை ஏற்கனவே கைப்பற்றி விட்டது. இதையடுத்து இரு அணிகளுக்கும் இடையிலான கடைசி ஒருநாள் போட்டி நேற்று முன்தினம் நடைபெற்றது.

இதில், முதலில் துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் அணி 47 ஓவர்களில் 9 விக்கெட்கள் இழந்து 308 ஓட்டங்கள் குவித்தது. பாகிஸ்தான் தரப்பில் அதிகபட்சமாக சைம் அயூப் 101 ஓட்டங்கள் எடுத்தார்.

தென்னாபிரிக்கா தரப்பில் ரபாடா 3 விக்கெட்கள் வீழ்த்தினார். தொடர்ந்து 309 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் விளையாடிய தென்னாபிரிக்கா 42 ஓவர்களில் அனைத்து விக்கெட்களையும் இழந்து 271 ஓட்டங்கள் மட்டுமே எடுத்தது. அந்த அணி சார்பில் அதிகபட்சமாக கிளாசென் 81 ஓட்டங்கள் எடுத்தார். இதன் மூலம் 36 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்ற பாகிஸ்தான் 3 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரை 3 - 0 என முழுமையாக கைப்பற்றியது. தொடர்ந்து இரு அணிகளுக்கும் இடையிலான டெஸ்ட் தொடர் நாளை மறுதினம் 26ஆம் திகதி தொடங்குகிறது.

(எ)

# இந்தியா பங்கேற்கும் போட்டிகள் டுபாயில்

## பாகிஸ்தான் பரிந்துரை

லாகூர், டிசெ.24

இந்திய அணிக்குரிய ஆட்டங்கள் பாகிஸ்தான் கிரிக்கெட் சபையின் பரிந்துரையின் பேரில் டுபாயில் நடத்துவதற்கு முடிவு செய்யப்பட்டுள்ளது.

8 அணிகள் இடையிலான ஐ. சி. சி. சம்பியன்ஸ் கிண்ண கிரிக்கெட் போட்டி அடுத்த ஆண்டு (பெப்ரவரி, மார்ச்) பாகிஸ்தானில் நடைபெறவுள்ளது. பாதுகாப்பு அச்சுறுத்தல் காரணமாக இந்திய அணி அங்கு செல்ல மறுத்ததால் இந்திய அணிக்குரிய போட்டிகள் மட்டும் பொதுவான இடத்தில் நடைபெறும் என்று சர்வதேச கிரிக்கெட் பேரவை (ஐ. சி. சி.) அறிவித்துள்ளது.

இந்த நிலையில், இந்திய அணிக்குரிய ஆட்டங்கள் பாகிஸ்தான் கிரிக்கெட் சபையின் பரிந்துரையின் பேரில் டுபாயில் நடத்துவதற்கு முடிவு செய்யப்பட்டுள்ளது. இந்திய அணி அரையிறுதி மற்றும் இறுதிப்போட்டிக்கு தகுதி பெற்றால் இவ்விரு ஆட்டங்களும் டுபாயில் தான் நடைபெறும்.

மாறாக இந்தியா இறுதிப்போட்டிக்கு செல்லாவிட்டால் அதன் பிறகு இறுதி ஆட்டம் பாகிஸ்தானில் நடைபெறும். ஓரிரு நாட்களில் இதற்கான போட்டி அட்டவணை வெளியிடப்படவுள்ளது.

(எ)

# சாதனை படைத்த ஸ்மிருதி மந்தனா



புதுடில்லி, டிசெ.24

ஓராண்டில் 1, 602 ஓட்டங்களுடன் இந்திய அணியின் ஸ்மிருதி மந்தனா முதலிடம் பிடித்து சாதனை படைத்துள்ளார்.

மேற்கு இந்திய தீவுகள் அணிக்கு எதிரான முதலாவது ஒருநாள் போட்டியில் 91 ஓட்டங்கள் எடுத்ததன் மூலம் சர்வதேச போட்டியில் ஓராண்டில் அதிக ஓட்டங்கள் அடித்த வீராங்கனைகளின் பட்டியலில் 1, 602 ஓட்டங்களுடன் ஸ்மிருதி மந்தனா முதலிடம் பிடித்து வரலாற்று சாதனை படைத்துள்ளார்.

(எ)

# தலைவியாக 1000 ஓட்டங்கள் ஹர்மன்ப்ரீத் கவுர் சாதனை

புதுடில்லி, டிசெ.24

ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் இந்திய அணியின் தலைவியாக 1000 ஓட்டங்கள் எடுத்து ஹர்மன்ப்ரீத் கவுர் சாதனை படைத்துள்ளார்.

மேற்கு இந்திய தீவுகள் மகளிர் அணி இந்தியாவில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு 3 ரி - 20 மற்றும் 3 ஒருநாள் போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடி வருகிறது. இவ்விரு அணிகள் இடையிலான 3 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடர் நேற்று முன்தினம் தொடங்கியது.இந்தப் போட்டியில் ஹர்மன்ப்ரீத் கவுர் 34 ஓட்டங் கள் எடுத்தார். இதன் மூலம் அவர் ஒருநாள் போட்டிகளில் அணித் தலை வியாக 1000 ஓட்டங்களைக் கடந்து சாதனை படைத்துள்ளார்.



(எ)

# இலங்கை - நியூசிலாந்து இடையே முதல் ரி- 20 போட்டி 28 ஆம் திகதி

வெலிங்டன், டிசெ.24

இலங்கை - நியூசிலாந்து அணிகள் மோதும்முதல் ரி- 20 போட்டி 28 ஆம் திகதி நடைபெற வுள்ளது.

இலங்கை கிரிக்கெட் அணி நியூசிலாந்துக்கு சுற்றுப் பயணம் மேற்கொண்டு 3 ரி - 20 மற்றும் 3 ஒருநாள் போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடவுள்ளது. இந்தத் தொடர் எதிர்வரும் 28ஆம் திகதி தொடங்குகிறது. இந்தத் தொடரில் முதலில் ரி - 20 போட்டிகளும் அதனைத் தொடர்ந்து ஒருநாள் போட்டிக்ளும் நடைபெறவுள்ளன.

இந்த நிலையில், இலங்கைக்கு எதிரான ரி - 20 மற்றும் ஒருநாள் தொடர்களுக்கான நியூசிலாந்து அணி அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த அணிக்கு மிட்செல் சாண்ட்னர் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார்.

நியூசிலாந்து அணி விவரம் வருமாறு, மிட்செல் சாண்ட்னர், மைக்கேல் பிரேஸ்வெல், மார்க் சப்மென், ஜேக்கப் டபி, மிட்ச் ஹே, மேட் ஹென்றி, டேரில் மிட்செல், கிளென் பிலிப்ஸ், ரச்சின் ரவீந்திரா, நாதன் ஸ்மித், ஜேக் போல்க்ஸ் (ரி -20 அணிக்கு மட்டும்), பெவன் ஜேக்கப்ஸ் (ரி -20 அணிக்கு மட்டும்), ரிம் ரொபின்சன் (ரி- 20 அணிக்கு மட்டும்), ரொம் லேதம் (ஒருநாள் அணிக்கு மட்டும்), வில் ஓ ரூர்க் (ஒருநாள் அணிக்கு மட்டும்), வில் யங் (ஒருநாள் அணிக்கு மட்டும்) என அறிவிக்கப்பட்டுள்ளது.

(எ)



# 75 ஓட்டங்கள் வித்தியாசத்தில் அவுஸ்திரேலிய அணி வெற்றி



வெலிங்டன், டிசெ.24

நியூசிலாந்து - அவுஸ்திரேலிய அணிகளுக்கு இடையிலான கடைசி ஒருநாள் போட்டியில் அவுஸ்திரேலியா 75 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

அவுஸ்திரேலிய மகளிர் கிரிக்கெட் அணி நியூசிலாந்தில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு 3 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரில் விளையாடியது. இதில் முதல் ஆட்டம் மழையால் கைவிடப்பட்டது. 2ஆவது ஆட்டத்தில் அவுஸ்திரேலியா வெற்றி பெற்று தொடரில் 1 - 0 என முன்னிலையில் உள்ளது. இரு அணிகளுக்கும் இடையிலான கடைசி ஒருநாள் போட்டி நேற்று முன்தினம் நடைபெற்றது.

இந்த ஆட்டத்துக்கான நாணயச்சுழற்சியில் வென்ற அவுஸ்திரேலியா முதலில் துடுப்பெடுத்தாடியது. அந்த அணியின் தொடக்க வீராங்கனைகளான அலிசா ஹீலி மற்றும் போப் லிட்ச்பீல்ட் ஆகியோர் களமிறங்கினர். இதில் அலிசா ஹீலி 39 ஓட்டங்களிலும், போப் லிட்ச்பீல்ட் அரைச்சதம் அடித்த நிலையில் 50 ஓட்டங்களிலும் ஆட்டமிழந்தனர்.

தொடர்ந்து களமிறங்கிய எல்லிஸ் பெர்ரி 14, பெத் மூனி 2, அன்னபெல் சதர்லேண்ட் 42, ஆஷ்லே கார்ட்னெர் 74 ஓட்டங்களில் ஆட்டமிழந்தனர்.

தொடர்ந்து களமிறங்கிய அவுஸ்திரேலிய வீராங்கனைகள் அடுத்தடுத்து தங்களது விக்கெட்களை பறிகொடுத்தனர். இதில் தஹ்லியா மெக்ராத் 10, அலனா கிங் 9, கிம் கார்த் 10, மேகன் ஸ்கட் 4 ஓட்டங்கள் எடுத்து ஆட்டமிழந்தனர். இறுதியில் அவுஸ்திரேலியா 49 ஓவர்களில் அனைத்து விக்கெட்களையும் இழந்து 290 ஓட்டங்கள் எடுத்தது.

நியூசிலாந்து தரப்பில் அமெலியா கெர் 4 விக்கெட்கள் வீழ்த்தினார். இதையடுத்து 291 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் களமிறங்கிய நியூசிலாந்து அணியால் 215 ஓட்டங்களை மட்டுமே எடுக்க முடிந்தது. இதனால், அவுஸ்திரேலிய அணி 75 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்று ஒருநாள் தொடரை முழுமையாக கைப்பற்றியது.

(எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மோட்டார்...

கொண்டிருந்தார். இதன்போது அவர் திடீரென வீதியில் மயங்கி விழுந்துள்ளார்.

இந்நிலையில் அவரை யாழ்.போதனா வைத்தியசாலைக்கு கொண்டு சென்றுவேளை அவர் ஏற்கனவே உயிரிழந்துவிட்டதாக தெரிவிக்கப்பட்டது. அவரது சடலம் மீதான மரண விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி ஆ.ஜெயபாலசிங்கம் மேற்கொண்டார்.

இருதய வால்வு சுருக்கம் காரணமாக மரணம் சம்பவித்துள்ளதாக உடற்கூற்று பரிசோதனை அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (அ-05)

## யாழ்.மாவட்ட...

குறிப்பிட்டார்.

வெளிமாவட்டங்களில் கடமைபுரியும் யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த நூற்றுக்கணக்கான ஆசிரியர்கள், வடக்கு மாகாண ஆளுநரை ஆளுநர் செயலகத்தில் நேற்று திங்கட்கிழமை சந்தித்துக் கலந்துரையாடினர்.

வெளிமாவட்டங்களில் தாம் நீண்ட காலம் பணியாற்றுவதாகவும் செல்வாக்குகளின் அடிப்படையில் சிலர் சொந்த இடங்களுக்கு இடமாற்றம் பெற்றுள்ளனர் எனவும் சுட்டிக்காட்டிய அவர்கள், தமக்குப் பின்னர் நியமனம் பெற்றவர்கள் கூட சொந்த இடங்களுக்கு இடமாற்றம் பெற்றுள்ள நிலையில் தமக்கு அநீதி இழைக்கப்பட்டுள்ளதாக ஆளுநரிடம் முறையிட்டனர்.

வடக்கு மாகாணத்தின் ஏனைய மாவட்டங்களில் யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த ஆசிரியர்கள் பணியாற்ற வேண்டும் எனவும், அவ்வாறு இதுவரை பணியாற்றாத ஆசிரியர்கள் இருப்பின் உரிய நடைமுறைக்கு அமைவாக அவர்களுக்கு இடமாற்றம் வழங்கப்படும் என்றும் குறிப்பிட்டார். உரிய காரணங் கள் இல்லாமல் இடமாற்றங்களை வழங்க முடியாது எனக் குறிப்பிட்ட ஆளுநர், வெளி மாவட்டங்களிலிருந்து யாழ். மாவட்டத்துக்கு ஆசிரியர் ஒருவர் இடமாற்றப்படும்போது அதே பாடத்துக்குரிய ஆசிரியர் வெளிமாவட்டத்துக்கு விடுவிக்கப்பட வேண்டும் என்றும் தெரிவித்தார். எதிர்காலத்தில் இந்த நடைமுறைகள் உரிய வகையில் பின்பற்றப்படும் எனவும் ஆளுநர் கூறினார். (அ)

## பயங்கர...

நடத்தப்பட இருக்கும் இலங்கையின் பரஸ்பர மதிப்பீட்டிற்கான முக்கிய தயார்படுத்தல் கூட்டம் ஜனாதிபதி தலைமையில் நேற்று பிற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தில் அமைச்சர்கள், செயலாளர்கள் மற்றும் இலங்கை மத்திய வங்கியினதும் நிதியியல் உளவறிதல் பிரிவினதும் அதிகாரிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

அமைச்சுகள், ஒழுங்குமுறைப்படுத்தல் நிறுவனங்கள் மற்றும் சட்ட அமுலாக்கல் முகவராண்மை நிறுவனங்கள் உள்ளடங்கலாக தொடர்புள்ள 24 நிறுவனங்களுக்காக வடிவமைக்கப்பட்ட அமைச்சரவை அங்கீகாரம் வழங்கப் பட்ட திட்டங்களை துரிதமாக நடைமுறைப்படுத்துவதன் அவசியத்தை நிதியியல் உளவறிதல் பிரிவு இங்கு வலியுறுத்தியது.

இலங்கையின் நிதிக்கட்டமைப்பு ஸ்திரத்தன்மையைப் பாதுகாத்து நாட்டின் பொருளாதாரம் தொடர்பில் சர்வதேச நம்பிக்கையினை மேம்படுத்துவதற்கும் அதன் ஊடாக சாதகமான பெறுபேறுகளை பெறவும் பணம் தூயதாக்கலுக்கெதிரான மற்றும் பயங்கர வாதத்திற்கு நிதியிடலை ஒழிப்பதற்கு பலமான மற்றும் செயற்திறனுள்ள கட்டமைப்பொன்று அவசியம் என ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

நிதி மற்றும் திட்டமிடல் பிரதி அமைச்சர் ஹர்சன சூரியப்பெரும மற்றும் ஜனாதிபதியின் செயலாளர் கலாநிதி நந்திக சனத் குமாநாயக்க ஆகியோரும் இந்தக் கலந்துரையாடலில் இணைந்து கொண்டனர். (அ)

## உள்ளூராட்சி சபை தேர்தலில் பொதுஜன பெரமுன தனி வழி!

கொழும்பு, டிசெ. 24

எதிர்வரும் உள்ளூராட்சி சபைத் தேர்லில் பொது ஜன பெரமுன தனித்துப் போட்டியிடுவதில் அவதானம் செலுத்தி வருவதாக கட்சித் தகவல்கள் தெரிவிக்கின்றன.

எவ்வாறாயினும், அதன் பிரதான பங்காளிக் கட்சி யான இலங்கை சமசமாஜக் கட்சியுடன் மாத்திரம் உடன் படிக்கையை ஏற்படுத்துவதில் அவதானம் செலுத்தியுள் ளதாக அந்த தகவல்கள் குறிப்பிட்டுள்ளன.

பொதுஜன பெரமுனவின் அரசியல் சபை மற்றும் நிறைவேற்று குழு அண்மை யில் கூடி, இந்த விடயங்கள் தொடர்பில் விரிவாக ஆராய்ந்துள்ளது.

அங்கு எதிர்வரும் உள்ளூராட்சிச் சபைத் தேர்தலில் பொதுஜன பெரமுன தனித்து போட்டியிடுவதே பொருத்தமானது என அக்கட்சியில் பலரும் கருத்து வெளியிட்டுள்ளனர்.

## எலிக்காய்ச்சல்...

மாதத்தில் 91 பேரும் டெங்குத் தொற்றுக்கு உள்ளாகி யுள்ளனர்.

எனவே, பொதுமக்கள் தங்களின் சுற்றுப்புறச் சூழலை தூய்மையாகப் பேணுவது அவசியம் - என்றார்.

அதேவேளை கடந்த நவம்பர் மாதம் இறுதி யில் யாழில் பெய்த கடும் மழை காரணமாக டிசெம் பர் மாத முற்பகுதியில் எலிக்காய்ச்சல் தொற்று ஏற்பட்டத்தில் 08 பேர் உயிரிழந்துள்ளதுடன் 200 இற்கும் மேற்பட்டவர்கள் பாதிக்கப்பட்டு சிகிச்சை பெற்றுள்ளனர். இந்நிலையில் இப்போது டெங்கு தொற்று அதிகரித்துச் செல்வது குறிப்பிடத்தக்கது. (அ)

## உள்ளூராட்சி...

உள்ளூராட்சி மன்றங்கள் மற்றும் மாகாண சபைகள் அமைச்சுக்கு அறிவுறுத்தியுள்ளது.

ஏற்றுக் கொள்ளப்பட்ட வேட்பு மனுக்களை இரத்துச் செய்து புதிதாக வேட்புமனுக்களை கோருவதாயின் உள்ளூராட்சிச் சபைத் தேர்தல் சட்டத்தில் திருத்தம் செய்யவேண்டும் என தேர்தல்கள் ஆணைக்குழு உள்ளூராட்சி மன்றங்கள் மற்றும் மாகாண சபைகள் அமைச்சுக்கு முன்னர் அறிவுறுத்தியிருந்தது.

உள்ளூராட்சிச் சபை சட்டத்தை 2025 ஆம் ஆண்டு ஜனவரி மாதமளவில் திருத்தம் செய்வதாக அரச நிர்வாகம், உள்ளூராட்சி மன்றங்கள் மற்றும் மாகாண சபைகள் அமைச்சு தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு எழுத்துமூலமாக அறிவித்தது.

குறித்த சட்ட திருத்தத்தை வெகு விரைவில் நிறைவேற்றுமாறு தேர்தல்கள் ஆணைக்குழு உள்ளூராட்சி மன்றங்கள் மற்றும் மாகாண சபைகள் அமைச்சுக்கு மீண்டும் அறிவுறுத்தியுள்ளது.

ஏற்றுக்கொள்ளப்பட்ட வேட்பு மனுக்களை இரத்துச் செய்து, புதிதாக வேட்புமனுக்களை கோருவதற்கு அமைச்சரவை அங்கீகாரம் அளித்துள்ள நிலையில், தேர்தல் பணிகளை ஆரம்பத்தில் இருந்து முன்னெடுக்கவேண்டும். ஆகவே சட்டத்திருத்தத்தை துரிதமாக நிறைவேற்றுமாறு தேர்தல்கள் ஆணைக்குழு வலியுறுத்தியுள்ளது.

உள்ளூராட்சிச் சபைத் தேர்தலுக்கு 80 ஆயிரம் வேட்பாளர்கள் போட்டியிடுவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகின்ற நிலையில் தேர்தல் செலவுகளை மதிப்பிடுவது கடினமானது எனவும் தேர்தல்கள் ஆணைக்குழு குறிப்பிட்டுள்ளது.

ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள வேட்பு மனுக்களை இரத்துச் செய்வது தொடர்பான சட்ட வரைவினை எதிர்வரும் மாதம் பாராளுமன்றத்துக்கு சமர்ப்பிப்பதாக தெரிவித்த ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க சித்திரை புத்தாண்டுக்கு பின்னர் உள்ளூராட்சி மன்றத் தேர்தல் வாக்கெடுப்பை நடத்துவதாகவும் உறுதியளித்திருந்தார். (அ)

## வடக்கில் சில அதிகாரிகளை...

மக்களுடன் நானும் இடம்பெயர்ந்து செல்லவேண்டியிருந்தது. அப்படியான தொரு மாவட்டத்தில் நடைபெறும் நிகழ்வில் பங்கேற்பதில் பெரும் மகிழ்வடைகின்றேன்.

எந்த வசதிகளும் இல்லாமல் அன்றைய எமது பணிக்காலம் இருந்தது. ஆனாலும் மக்களுக்கு சிறப்பான சேவைகளை வழங்கியிருந்தோம்.

உங்களுடைய தற்போதைய மாவட்ட செயலர் சு.முரளிதரன் நேர் மையான ஒருவர். மக்களின் துன் பங்களை அறிந்து அவர்கள் துயர் துடைக்கக்கூடிய ஒருவர். அவர் உங்களுக்கு மாவட்ட செயலராகக் கிடைத்தமை சிறப்பானது.

இன்றைய இளையோர்களிடம் மற்றவர்களை மதிக்கும், உதவி செய்யும் பண்புகளைக் காண முடியவில்லை. தவறு செய்பவர்களை தட்டிக்கேட்க முடியாத நிலைமை இருக்கின்றது. வீதிகளில் குப்பைபோடுகின்றோம். வெள்ளம் வடிந்தோடும் வாய்க்கால்களை ஆக்கிரமித்து கட்டடங்களைக் கட்டுகின்றோம்.

ஒழுக்கமில்லாத சமுதாயமாக நாங்கள் மாறிக்கொண்டு போகின்றோம். மிகக் கவலையாக இருக்கின்றது.

விழா மண்டபத்தை இந்தப் பிரதேச செயலக அலுவலர்களே அதிகமாக நிரப்பிக்கொண்டிருப்பதாக பிரதேச செயலரும், மாவட்டச் செயலரும் என்னிடம் சொன்னார்கள். உண்மையில் வேதனையாக இருக்கின்றது. எமது பிரதேசத்தின் பண்பாட்டு விழாவுக்கு வருகின்றார்கள் இல்லை. ஆனால் குத்துப்பாட்டுக்களுடன் நடக்கும் நிகழ்வுகளுக்கு அள்ளுகொள்ளையாகச் செல்கின்றார்கள்.

ஏனையவர்களுக்கு உதவி செய்வதில்தான் உண்மையான சந்தோசம் இருக்கின்றது. ஆனால் இன்று எம்மில் பலர் பணம்தான் சந்தோசம் என்று நினைக்கின்றார்கள். பணம் சந்தோசத்தை தராது. ஒருவனுக்கு நாங்கள் உதவி செய்தால் எங்களுக்கு பல மடங்கு பல்வேறு வழிகளில் திருப்பி உதவி கிடைக்கும்.

மனிதனாகப் பிறந்த ஒவ்வொருவரும் பிறருக்கு உதவி செய்யவேண்டும். அதேபோல எல்லா மதங்களும் அன்பைத்தான் போதிக்கின்றன. மற்றையவர்களிடத்தில் நாம் அன்பு செலுத்தவேண்டும்.

இதேவேளை, வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலருக்கு அடுத்த நிலையிலுள்ள ஓர் அதிகாரிக்கு தொலைபேசியில் அழைப்பெடுத்து ஆசிரியர்களின் இடமாற்றம் தொடர்பில் முன்வைக்கப்பட்ட கோரிக்கையை சாதகமாக அணுகுமாறுகூறி விட்டு அவர்களை அவரிடம் அனுப்பினேன். அந்த அதிகாரி தனது அலுவலகத்தில் நடைபெற்ற கூட்டத்தில் பங்கேற்றுவிட்டு ஆசிரியர்களை, இரவு 7 மணிக்குத்தான் அலுவலகத்தில் சந்தித்திருக்கிறார். ஆசிரியர்களை மிக மோசமான முறையில் பேசி திருப்பி அனுப்பியிருக்கின்றார். இவ்வாறான அலுவலர்கள் எமது மாகாணத்தில் எனக்கு கீழ் இருக்கின்றார்கள் என்பதை நினைக்கும்போது வெட்கமாக இருக்கின்றது.

எங்களுக்கு பதவிகள் தரப்பட்டது மக்களுக்கு சேவைசெய்யவே. அதை சகல அலுவலர்களும் மனதிலிருத்துங்கள்.

உங்களிடம் சேவைக்காக பொது மக்கள் வரும்போது, அந்தப் பொது மகனாக நீங்கள் இருந்தால் எப்படி நடந்துகொள்வீர்கள்? அப்போது உங்களுக்கு பேசுவதற்கு அல்லது மனித நேயமற்று நடப்பதற்கு மனம்வருமா? எனவே தற்போதுள்ள சகல வசதிகள், ஆளணிகளை வைத்துக்கொண்டு எங்களுக்கு மக்களுக்கு சகலரும் சிறந்த சேவைகளை வழங்க முன்வரவேண்டும்- என்றார். (அ-05)

## மஹிந்தவுக்கு...

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போது அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

பிரபுக்களின் பாதுகாப்பு தொடர்பில் ஆராய்வதற்கு நியமிக்கப்பட்ட குழு முன்னாள் ஜனாதிபதிகளின் பாதுகாப்பு குறித்து பாதுகாப்பு தரப்பினரிடம் அறிக்கை பெற்றுக் கொண்டுள்ளது.

இதற்கமைய 2024.10.10 ஆம் திகதியன்று முன்னாள் ஜனாதிபதி மகிந்தவின் பாதுகாப்புக்கு பொறுப்பான பொலிஸ் அத்தியட்சகர் எஸ்.டி.விக்கிரமசிங்க மகிந்த ராஜபக்ஷவின் பாதுகாப்பு தொடர்பில் மீளாய்வு குழுவுக்கு அறிக்கை சமர்ப்பித்துள்ளார்.

அந்த அறிக்கையில் முன்னாள் ஜனாதிபதி மகிந்தவின் பாதுகாப்பு குறித்து புலனாய்வுப் பிரிவினர் சமர்ப்பித்த 13 அறிக்கைகள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

2024 ஆம் ஆண்டு சமர்ப்பிக்கப்பட்ட 04 புலனாய்வுப் பிரிவின் அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. மகிந்தவின் பாதுகாப்பு ஏன் பலப்படுத்தப்படவேண்டும் என்பதற்கான காரணிகளும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளன.

ஐ.எஸ்.ஐ.எஸ் அமைப்பினால் ட்ரோன் கருவி ஊடான குண்டுத்தாக்குதல் நடத்தப்படுவதற்கான சாத்தியம் காணப்படுவதாகவும், அத்துடன் அரசியல் காரணிகளை அடிப்படையாகக் கொண்டு அரச சார்பற்ற அமைப்புக்களினால் திட்டமிட்ட தாக்கதல்கள் நடத்தப்படுவதற்கான சாத்தியம் இருப்பதாகவும் புலனாய்வு அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

மகிந்தவின் பாதுகாப்பு தொடர்பில் புலனாய்வு பிரிவு சமர்ப்பித்த அறிக்கைகளை கவனத்திற் கொள்ளாமல் அரசாங்கம் முறையற்ற வகையில் இராணுவ பாதுகாப்பை முழுமையாக நீக்கியுள் து.

மகிந்தவுக்கு 100 அல்ல 1000 இராணுவத்தினரை பாதுகாப்புக்கு அமர்த்தினாலும் குறையேதுமில்லை. ஏனெனில் இராணுவத்தினர் தமது சொந்த ஊருக்கு சவப்பெட்டியில் செல்லும் காலத்தை அவர் தான் முடிவுக்கு கொண்டு வந்தார்.

முன்னாள் ஜனாதிபதிகளான மைத்திரிபால சிறிசேன,ரணில் விக்கிரமசிங்க ஆகியோருடன் மகிந்த ராஜபக்ஷவை ஒப்பிட முடியாது. ஏனெனில் மகிந்த தேசியத்தை பாதுகாப்பதற்காக கடுமையான தீர்மானங்களை எடுத்தார்.

ஆகவே மகிந்தவுக்கு எதிராக பிரிவினைவாத சக்திகள் தேசிய மட்டத்திலும், சர்வதேச மட்டத்திலும் இன்றும் செயற்படுகின்றன. மகிந்தவுக்கு ஏதேனும் பாதிப்பு ஏற்பட்டால் அரசாங்கம் முழு பொறுப்பையும் ஏற்கவேண்டும் - என்றார். (அ)

## விமானப்படை...

மிரிஹானை முகாமுக்கு அழைத்துச் செல்லப்படுவதாக கூறப்பட்டிருந்த நிலையில் கேப்பாபிலவு விமானப்படை முகாமுக்கு குறித்த அகதிகள் அழைத்து வரப்பட்டுள்ளனர்.

கடந்த வியாழக்கிழமை முள்ளிவாய்க்கால் மேற்கு கடற்கரையில் 115 பயணிகளுடன் கரை ஒதுங்கிய மியன்மார் படகு கடந்த வெள்ளிக்கிழமை திருகோணமலை அஷ்ரப் துறைமுகத்துக்கு கொண்டுவரப்பட்டது.

அதன் பின்னர், அன்றைய தினம் மாலை குறித்த பயணிகள் திருகோணமலை நீதவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டிருந்தனர்.

இதன்போது 12 மாலுமிகள் கைது செய்யப்பட்டுச் சிறையில் அடைக்கப்பட்டதுடன் ஏனைய 103 பயணிகளும் திருகோணமலை ஜமாலியா முஸ்லிம் மகா வித்தியாலயத்தில் தங்க வைக்கப்பட்டு அவர்களுக்கான வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்டிருந்தன.

இந்நிலையில், மிரிஹானை இடைத்தங்கல் முகாமில் தங்கவைப்பதற்காக கடந்த சனிக்கிழமை மியன்மார் அகதிகள் அழைத்துச் செல்லப்பட்டிருந்தனர்.

எனினும், குடிவரவு குடியகல்வு திணைக்களம் அனுமதி வழங்காததன் காரணமாக அவர்கள் மீள திருகோணமலைக்கு திருப்பி அனுப்பப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu

# இலங்கைச் சிறைகளில் உள்ள இந்திய மீனவரை விடுவிக்குக!

## தி.மு.க. கூட்டத்தில் கோரிக்கை

சென்னை, டிசெ. 24

**இலங்கை மீனவர்களால் கைது செய்யப்படுகின்ற இந்திய மீனவர்களை உடனடியாக விடுதலை செய்யவேண்டும் என வலியுறுத்தப்பட்டுள்ளது.**

சென்னை - கலைஞர் அரங்கில் திராவிட முன்னேற்றக் கழக செயற்குழுக் கூட்டம் கட்சியின் தலைவர் மு.க.ஸ்டாலின் தலைமையில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற போது இந்த விடயம் தொடர்பில் ஆராயப்பட்டுள்ளது.

இதன்போது, இந்திய மீனவர்களை கைது செய்து அவர்களின் படகுகளைப் பறிமுதல் செய்வது அவர்களின் வாழ்வாதாரத்தைக் கேள்விக்குறியாக்கும் விடயம் என குறித்த செயற்குழு கூட்டத்தில் கலந்து கொண்ட கட்சியின் உறுப்பினர்கள் தெரிவித்துள்ளனர்.

கைது செய்யப்படும் இந்திய மீனவர்களுக்கு இலங்கை நீதிமன்றங்களில் விதிக்கப்படும் சிறைத் தண்டனை மற்றும் அபராதம் என்பன இரண்டு நாடுகளுக்குமிடையிலான நட்புறவை சீர்குலைக்கும் விடயம் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

தற்போது இலங்கையில் சிறை பிடிக்கப்பட்டுள்ள இந்திய மீனவர்களை விடுவித்து அவர்களது படகுகளையும் விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என தமிழக முதலமைச்சரிடம் இதன்போது தி.மு.க செயற்குழு கூட்டம் கோரிக்கை விடுத்துள்ளது. (அ)

# பண்டிகை காலத்தை முன்னிட்டு நாடு முழுக்க விசேட பாதுகாப்பு

கொழும்பு, டிசெ. 24

பண்டிகை காலத்தை முன்னிட்டு நாடு முழுவதும் விசேட பொலிஸ் பாதுகாப்பு நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளதாக பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

பொலிஸ் ஊடகப் பிரிவினால் நேற்று வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நத்தார் பண்டிகை மற்றும் புதுவருடப் பிறப்பு கொண்டாட்டங்களுக்காக பெருந்திரளான மக்கள் பிரதான மற்றும் புறநகர் பகுதிகளுக்கு வருகை தருவார்கள். குறிப்பாக கத்தோலிக்க தேவாலயங்களில் நடைபெறும் விசேட ஆராதனைகளில் கலந்துகொள்வதற்காக பெருந்திரளான பக்தர்கள் வருகை தருவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

அவ்வாறு வருகை தரும் பொதுமக்களின் பாதுகாப்புக்காகவும் போக்குவரத்து நெரிசலைக் கட்டுப்படுத்துவதற்கும் பொது இடங்களை மையப்படுத்தி பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

இதற்கென சுமார் 40 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பொலிஸ் உத்தியோகத்தர்கள் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

மேலும், பொதுமக்கள் அதிகமாக நடமாடும் இடங்களில் ஐந்நூறுக்கும் மேற்பட்ட உத்தியோகத்தர்கள் சிவில் உடையில் கடமைக்கு அமர்த்தப்பட்டுள்ளனர். அத்துடன் புலனாய்வுப் பிரிவினரும் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

இந்நிலையில், பொதுமக்கள் மற்றும் வாகன சாரதிகள் உரிய விதிமுறைகளை அவதானத்துடன் கடைப்பிடிக்குமாறு பொலிஸ் தலைமையகம் கோரிக்கை விடுத்துள்ளது. (அ)

# உள்ளூராட்சி தேர்தல் திருத்த சட்டம் 7 ஆம் திகதி சபையில் முன்வைப்பு

கொழும்பு, டிசெ. 24

உள்ளூராட்சிச் சபைத் தேர்தல் திருத்தச்சட்டமூலம் எதிர்வரும் 07 ஆம் திகதி பாராளுமன்றத்தில் முன்வைக்கப்படவுள்ளது என தெரியவருகின்றது.

2025 ஆம் ஆண்டுக்கான முதலாவது பாராளுமன்றக் கூட்டத்தொடர் ஜனவரி 7 ஆம் திகதி ஆரம்பமாகின்றது. ஜனவரி 10 ஆம் திகதி வரை சபை அமர்வுகள் இடம்பெறும்.

ஷஇதன்படி ஜனவரி 7 ஆம் திகதி துறைசார் அமைச்சரால் மேற்படி சட்டமூலம் முன்வைக்கப்படவுள்ள தெனவும், ஏதேனும் சிக்கல் ஏற்படின் 10 ஆம் திகதிக்குள் அது சமர்ப்பிக்கப்படவுள்ளதெனவும் தெரியவருகின்றது.

உள்ளூராட்சிச்சபைத் தேர்தலுக்காக ஏற்கனவே கோரப்பட்டிருந்த வேட்பு மனுக்களை நிராகரித்து, புதிதாக வேட்பு மனுக்களை கோரும் வகையிலேயே சட்டத் திருத்தம் வரவுள்ளது. உள்ளூராட்சிச் சபைத் தேர்தல் மார்ச் இறுதியில் அல்லது ஏப்ரல் முதல் வாரத்தில் இடம்பெறும் என்பது குறிப்பிடத்தக்கது. (அ)

# ஐ.தே.க மறுசீரமைப்பு ஜனவரியில் ஆரம்பம்!

கொழும்பு, டிசெ. 24

ஐக்கிய தேசியக் கட்சியை மறுசீரமைப்பதற்குரிய ஆரம்பக்கட்ட செயல்பாடுகள் எதிர்வரும் ஜனவரி மாதம் ஆரம்பமாகவுள்ளதென நம்பகரமான வட்டாரங்களில் இருந்து அறியமுடிகின்றது.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைப் பதவியை சஜித்துக்கு வழங்குவதற்கு கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க உள்ளிட்ட தரப்பின் பச்சைக்கொடி காட்ட மறுப்பதால் ஐ.தே.க மற்றும் ஐக்கிய மக்கள் சக்தி இணைவு சாத்தியமான திசையை நோக்கி நகரவில்லை.

எனவே, உளளூராட்சிச்சபைத் தேர்தலை யானைச் சின்னத்தின்கீழ் எதிர்கொள்வதற்கு ஐ.தே.க திட்டமிட்டுள்ளது. தேர்தலுக்கு முன்னதாக மறுசீரமைப்புக்கான ஆரம்ப கட்ட திட்டங்கள் வெளியிடப்படக்கூடும்.

அதன் பிறகு செப்ரெம்பர் மாதம் நடைபெறவுள்ள கட்சி மாநாட்டிலேயே இறுதியான முடிவுகள் எடுக்கப்படவுள்ளன என தெரிவிக்கப்பட்டது. (அ)

# வகவத்தை உப மின்னுற்பத்தி நிலையம் தேசிய மின் கட்டமைப்புடன் இணைப்பு!

கொழும்பு, டிசெ. 24

2,300 மில்லியன் ரூபாய் முதலீட்டில் நிர்மாணிக்கப்பட்ட வகவத்தை உப மின்னுற்பத்தி நிலையம் தேசிய மின் கட்டமைப்புடன் இணைக்கப்பட்டுள்ளது.

இலங்கை முதலீட்டு சபையினால் அன்பளிப்புச் செய்யப்பட்ட 5 ஏக்கர் நிலப்பரப்பில் நிர்மாணிக்கப்பட்ட இந்த மின்னுற்பத்தி நிலையம் ஊடாக உற்பத்தி செய்யப்படும் 90 மெகாவட் மின்சாரம் தேசிய மின்கட்ட மைப்புடன் இணைக்கப்பட்டுள்ளது.

இலங்கை முதலீட்டு சபையின் வகவத்தை மற்றும் மில்லனிய கைத்தொழில் வலயங்களுக்கு மின்சாரத்தை விநியோகிப்பதற்காக இந்த உப மின்னுற்பத்தி நிலையம் நிர்மாணிக்கப்பட்டது. (அ)

# பொருளாதார கொலையாளிகளை நீக்க நடவடிக்கை எடுக்கவேண்டும்

## மின்சார பாவனையாளர்கள் சங்கம்

கொழும்பு, டிசெ. 24

இலங்கை மின்சார சபையில் உள்ள பொருளாதார கொலையாளிகளை நீக்குவதற்கு ஜனாதிபதி உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டும் என மின்சார பாவனையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

கொழும்பில் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து வெளியிட்ட அந்த சங்கத்தின் செயலாளர் சஞ்ஜீவ தம்மிக்க இதனைத் தெரிவித்தார்.

அதிகளவான இலாபத்தை ஈட்டியுள்ள இலங்கை மின்சார சபையினால் சுமார் 40 வீதமான சலுகைகளை மின்சார பாவனையாளர்களுக்கு வழங்க முடியும். தற்போது இலங்கை மின்சார சபையின் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளவர் நிலக்கரி மோசடியுடன் தொடர்புடையவர். இவ்வாறான பொருளாதார கொலையாளிகளைக் கண்டறிந்து ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க உடனடியாக உரிய நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும் என மின்சார பாவனையாளர்கள் சங்கத்தின் செயலாளர் கூறினார். (அ)

# தேசியப்பட்டியல் உறுப்பினர் பதவியை பங்கு போட்டுக் கொள்ளப்போதில்லை!

## கூறுகிறார் பைசர் முஸ்தபா

கொழும்பு, டிசெ. 24

சுதந்திர கட்சி மூலம் எனக்கு கிடைத்திருக்கும் தேசியப்பட்டியல் பாராளுமன்ற உறுப்பினர் பதவியை யாருடனும் பங்கு போட்டுக்கொள் ளப்போவதில்லை. அவ்வாறான எந்த நிபந்தனையும் எனக்கு போடப்படவும் இல்லை என புதிய ஜனநாயக முன்னணியின் தேசியப்பட்டியல் உறுப்பினர் பைசர் முஸ்தபா தெரிவித்தார்.

கொழும்பில் உள்ள அவரது காரியாலயத்தில் நடத்திய செய்தி யாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

பாராளுமன்ற தேர்தலில் புதிய ஜனநாயக முன்னணியுடன் சுதந்திர கட்சி மேற்கொண்டிருந்த ஒப்பந்தத்தின் பிரகாரம் அந்த கட்சிக்கு கிடைக்கப் பெற்ற இரண்டு தேசியப்பட்டியல் பதவியில் ஒன்று எனக்கு கிடைக்கப் பெற்றுள்ளது. தேசியப்பட்டியல் பதவியை எனக்கு வழங்கப்பட வேண்டும் என சுதந்திர கட்சியே எனது பெயரை பரிந்துரை செய்திருந்தது. அதன் பிர காரமே எனக்கு இந்த தேசியப்பட் டியல் கிடைக்கப் பெற்றது.

ஆனால் எனக்கு கிடைக்கப் பெற்ற தேசியப்பட்டியல் குறிப்பிட்ட ஒரு காலத்துக்கு பின்னர் வேறு ஒரு உறுப்பினருக்கு வழங் கப்பட வேண்டும் என்ற நிபந்தனையுடனே எனக்கு வழங்கப்பட்டுள்ளதாக சிலர் தெரிவித்து வருகின்றனர். அவ்வாறு எந்த நிபந் தனையும் எனக்கு விதிக்கப்பட வில்லை. எனக்கு கிடைக்கப் பெற்றிருக்கும் இந்த பாராளுமன்ற உறுப்பினர் பதவி அடுத்துவரும் 5வருடங்களுக்கு என்க்குரியதாகும் இதில் யாருடனும் நான் பங்கு போடப்போவதில்லை.

அத்துடன் புதிய ஜனநாயக முன்னணியுடன் 4 கட்சிகளே ஒப்பந்தம் செய்திருந்தன. அந்த கட்சிகளில் பெரும்பான்மையான கட்சிகள் தேசியப்பட்டியல் உறுப்பினர் பதவிக்கு எனது பெயரை பரிந்துரை செய்திருந்தன. அவ்வாறு இல்லாமல் தேசியப்பட்டியல் உறுப்பினர் பதவியை பெற்றுக் கொள்ள நான் ஒருபோதும் போராடவில்லை. அந்த வகையில் எனக்கு தேசியப்பட்டியல் உறுப்பினர் பதியை பெற்றுக்கொடுக்க பாடுபட்ட நிமல் சிறிபால டி சில்வா, துமிந்த திஸநாயக்க, மஹிந்த அமரவீர ஆகியோருக்கு நன்றியை தெரிவித்துக்கொள்கிறேன் - என்றார். (அ)

# கோழி, முட்டைக்கு தட்டுப்பாடு இல்லை

கொழும்பு, டிசெ. 24

பண்டிகைக் காலத்தில் கோழி இறைச்சி மற்றும் முட்டைக்கான தட்டுப்பாடு ஏற்படாதென அகில இலங்கை கால்நடை உற்பத்தியாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

போதுமான கையிருப்பின் ஊடாக தேவைக்கேற்ப சந்தை விநியோகம் இடம்பெறுவதாக சங்கத்தின் தலைவர் அஜித் குணசேகர குறிப்பிட்டார்.

ஒரு கிலோகிராம் குளிரூட்டப்பட்ட கோழி இறைச்சியை 1000 ரூபாவுக்கும் குறைந்த விலையில் கொள்வனவு செய்ய முடியுமென அகில இலங்கை கால்நடை உற்பத்தியாளர்கள் சங்கத்தின் தலைவர் அஜித் குணசேகர கூறினார்.

முட்டையொன்றின் விலை 31 ரூபா முதல் 33 ரூபாவுக்கு இடைப்பட்ட தொகையில் விற்பனை செய்யப்படுவதாகவும் அவர் தெரிவித்தார். (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 24.12.2024 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org